# திருப்புகழ்

## திரட்டு



## ஆறுபடைவீடுகள்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY
GF/32

உ

முருகன் துணை

அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# திருப்புகழ்

## [ திரட்டு ]



பதிப்பாளர் :

**காந்தளகம்**

213, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்,

ரூபா: 5-00

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

முதற்பதிப்பு: 15-6-78.

உள்ளே:

| | பாடல் எண் |
|---|---|
| 1. விநாயகர் துதி | 1 — 4 |
| 2. சுப்பிரமணியர் துதி | — 5 |
| 3. முதற்படை வீடு திருப்பரங்குன்றம் | 6 — 16 |
| 4. இரண்டாம் படைவீடு திருச்செந்தூர் | 17 — 32 |
| 5. மூன்றும் படைவீடு பழநி (திருவாவினன்குடி) | 33 — 45 |
| 6. நான்காம் படைவீடு திருவேரகம் (சுவாமிமலை) | 46 — 54 |
| 7. ஐந்தாம் படைவீடு குன்றுதோறுடல் | 55 — 88 |
| 8. ஆறும் படைவீடு பழமுதிர்சோலை (அழகர்கோயில்) | 89 — 96 |
| 9. ஆறுதிருப்பதி | 97 — 98 |
| 10. பொது | 99 — 108 |

உ

சிவமயம்

# பதிப்புரை

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

இற்றைக்கு சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர் அருணகிரிநாதர். இவர் முருகப்பெருமானிடம் இறவாத இன்ப அன்பு பூண்டவர். கனவிலும் நனவிலும் முருகன் புகழை மறவாதவர். இவர் தந்த முருகன் புகழே திருப்புகழ்.

சந்தச் சுவையும், பக்திச் சுவையும் பொதிந்து விளங்கும் அருணகிரிநாதர் திருப்புகழ் படிப்போரையும் கேட்போரையும் பரவசப்படுத்தி முருகப் பெருமானிடத்து மீளா அன்பு பூணச்செய்கின்றது.

முருகன் திருப்புகழ் ஓதி முருகன் திருவருளை வேண்டும் அடியார்களுக்கு உதவுமுகமாகத் திருப்புகழ் திரட்டு என்னும் இந்நூலை வெளியிட்டுள்ளோம்.

இந்நூலில் ஆறுபடை வீடுகளின் தல வரலாற்றுச் சுருக்கமும், இப்படை வீடுகளுக்கான திருப்புகழ்ப் பாடல்களில் சிறப்பான திருப்புகழ்ப் பாடல்களும் ஏனைய சில பொதுத் தலங்களுக்கான திருப்புகழ்ப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

முருகனடியார்கள் நாளும் பொழுதும் இத்திருப் புகழ்களை அன்புடன் ஓதி அருள் பெருக்குவார்களாக.

மு. கணபதிப்பிள்ளை.

மறவன்புலோ,
சாவகச்சேரி.
15-6-78.




## ஆறுமுகன் துதி

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசலம மர்ந்த பெருமாளே.

வேலும் மயிலும் துணை.

உ

முருகக்கடவுள் துணை

அருணகிரிநாதர் அருளிச்செய்த

# திருப்புகழ்

## விநாயகர் துதி

### 1. மட்டவிழ் மலர்கொடு பணிவேன்

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொட சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## 2. உயிர்க்கு ஆதரவுற்று அருள்வாய்

*தந்ததனத் தானதனத் தனதான.*

உம்பர் தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## 3. திருப்புகழ் விருப்பொடு செப்பென அருளியது மறவேன்

*தத்ததன தத்ததன தத்ததன தத்ததன*
*தத்ததன தத்ததன தனதான.*

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ர துர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனவெ னக்கருள்கை மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழ மிடிப்பல்வகை தனிமூலம்

மிக்க அடிசிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கினச மர்த்தனெனும் அருளாளி
வெற்ப குடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே.

## 4. திருவடி அர்ச்சனை மறவேன்

தனன தனதன தத்தன தத்தன
தனன தனதன தத்தன தத்தன
தனன தனதன தத்தன தத்தன தனதான.

நினதுதிருவடி சத்திம யிற்கொடு
நினைவு கருதிடு புத்திகொ டுத்திட
நிறைய அமுதுசெய் முப்பழ மப்பமும் நிகழ்பால்தேன்
நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்
நிரவி லரிசிப ருப்பவ லெட்பொரி
நிகரி லினிகத லிக்கனி வர்க்கமும் இளநீரும்

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு
மகர சலநிதி வைத்தது திக்கர
வலியகரிமுக ஒற்றைம ருப்பனை வலமாக
மருவுமலர்புனை தொத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை மறவேனே

தெனன தெனதென தெத்தென னப்பல
சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்
திரளு முறுசதை பித்தநி ணக்குடல் செறிமூளை
செரும வுதரநி ரப்புசெ ருக்குடன்
இரைய விரவநி றைத்தக ணத்திடை
திமித திமிதிமி மத்தளி டக்கைகள் செகசேசே

எனவெ துகுதுகு துத்தென வொத்துகள்
துடிக ளிடிமிக வொத்துமு ழக்கிட
டிமுட டிமுடிமு டிட்டிமெ னத்தவில் எழுமோசை
இகலி யலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்றுந டித்திட
எதிரும் நிசிசர ரைப்பலி யிட்டருள் பெருமாளே.

# சுப்பிரமணியர் துதி

## 5. பட்சத்தொடு இரட்சித்தருள்

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன தனதான.

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

உ

முருகன் துணை

# திருப்பரங்குன்றம்

## முதற்படைவீடு

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேற் பெருமானின் சிறப்பான உறைவிடங்கள் ஆறு. இந்த ஆறு உறைவிடங்களில் முதலாவது உறைவிடம் திருப்பரங்குன்றம். இதுவே முதற்படைவீடு. மதுரைக்கு மேற்கே சுமார் ஐந்து மைல் தூரத்தில் திருப்பரங்குன்றம் இருக்கின்றது. இந்நகரத்தின் மத்தியில் உள்ள மலை சிவலிங்க வடிவிலமைந்து விளங்குகின்றது. இதனால் இம்மலை "பரங்குன்று" என அழைக்கப்படுகின்றது. இதையே "மாடமலி மறுகில் கூடற்குடவயின்" குன்று என திருமுருகாற்றுப்படையும் கூறுகின்றது.

இக்குன்றிலிருந்து தவமியற்றிய குன்றக்குமரனுக்கு பார்வதி சமேதராகப் பரமசிவன் காட்சியளித்தார் என்றும், காட்சியளித்த திருநாளே தைப்பூசத் திருநாள் என்றும், இந்நாளில் பரமசிவனையும் முருகப்பெருமானையும் மெய்யன்போடு வணங்குபவர்கள் இகபர சுகங்களைப் பெறுவர் என்றும் புராணவரலாறு கூறுகின்றது.

சிவபெருமான், உமாதேவியார், பிரமா, விஷ்ணு முதலான தேவர்கள் கண்டுகளிக்கவும், உலகம் உவப்பவும் குமரக்கடவுள் இந்திரன் மகளாம் தேவகுஞ்சரியை இக்குன்றில் திருமணம் புரிந்தார். இவையும் இவைபோன்ற திருவருட் செயல்களும் இத்திருத்தலத்தின் மகிமையை அறியத்தருவன.

இக்குன்றின் வடபால் மலையைக் குடைந்து அமைந்துள்ள கோயிலில் மூலமூர்த்தியாகிய குமரக்கடவுள் ஞானஒளிகாலும் வேலைத் தமது கையில் தாங்கி தேவசேன தேவியுடன் எழுந்தருளி அடியார்க்கருள்புரியும் காட்சியும்; கீழ்த்திசையில் தொட்டதும் பாவங்களைப் போக்கும் சரவணப்பொய்கையும்; தென்பால் உமையாண்டார் கோயிலும்; மேல்திசையில் பஞ்சபாண்டவர் குகையும் மலை உச்சிக்குச் செல்லும் வழியும்; மலை உச்சியில் காசி விசுவநாதர் ஆலயமும், காசி நீர்ச்சுனைத் தீர்த்தமும் இத்தலத்திற் சிறப்பாகத் தரிசிக்கவுள்ளன.

சரவணப்பொய்கைக்கு அருகிலுள்ள பஞ்சாட்சரப் பாறையிலிருந்து நக்கீரர் சிவபூசை செய்து தவமியற்றினர் என்பதை நினைவூட்டுமுகமாக இவ்விடத்தில் அமைந்துள்ள நக்கீரர் கோயிலையும், நக்கீரர் தவவலிமையை உலகறியச் செய்யுமுகமாக சுப்பிரமணியப் பெருமான் தம் கைவேலால் தென்பரங்குன்று மலைப் பாறை பிளந்த சுவட்டையும் இன்றுங் காணலாம்.

சம்பந்தர், சுந்தரர், நக்கீரர், அருணகிரிநாதர் முதலான மெய்யடியார்கள் பாடிய திருவருட்பாடல்களும், திருப்பரங்கிரிப் புராணமும் இத்தலமகிமையை என்றும் விளங்கச் செய்கின்றன.

குன்றக் குமரன் திருவடி சரணம்.

மு. க.

# திருப்பரங்குன்றம்

## முதற்படைவீடு

### 6. உன் அருள் என்று பெறுவேன்

*தனன தந்த தத்தத்த தந்த*
*தனன தந்த தத்தத்த தந்த*
*தனன தந்த தத்தத்த தந்த தனதான.*

கருவ டைந்து பத்துற்ற திங்கள்
வயிறி ருந்து முற்றிப்ப யின்று
கடையில் வந்து தித்திக்கு ழந்தை வடிவாகிக்
கழுவி யங்கெ டுத்துச்சு ரந்த
முலை யருந்து விக்கக்கி டந்து
கதறி யங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி.

அரைவ டங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவைய ணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி
அரிய பெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

இரவி யிந்த்ரன் வெற்றிக்கு ரங்கின்
அரச ரென்று மொப்பற்ற வுந்தி
இறைவன் எண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்
எரிய தென்றும் ருத்ரற்சி றந்த
அனும னென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரு மிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரிய தன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர் தங்கி லைக்கட்டை வென்ற
அரிமு குந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே
அயனை யும்பு டைத்துச்சி னந்து
உலகமுப்ப டைத்துப் பரிந்துள்
அருள்ப ரங்கி ரிக்குட்சி றந்த பெருமாளே.

## 7. என் பயமற மயில்முதுகினில் வருவாய்

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான:

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில ஞெருதவ மிலனுன தருள்மாரு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே

கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித் தடர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே

வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே

தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ மகிழ்வோனே
தெனத்தெ னந்தென எனவரி அளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழினிறை
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

## 8. திருப்பரங்கிரி வளநகர் மருவிய பெருமானே

வடத்தை மிஞ்சிய புளகித வனமுலை
தனைத்தி றந்தெதிர் வருமிளை ஞர்களுயிர்
மயக்கி யைங்கணை மதனனை ஒருஅரு மையினாலே

வருத்தி வஞ்சக நினைவொடு மெலமெல
நகைத்து நண்பொடு வருமிரு மெனவுரை
வழுத்தி யங்கவ ரொடுசரு வியுமுடல் தொடுபோதே

விடத்தை வென்றிடு படைவிழி கொடுமுள
மருட்டி வண்பொருள் கவர்பொழு தினில்மயல்
விருப்பெ னும்படி மடிமிசை யினில்விழு தொழில்தானே

விளைத்தி டும்பல கணிகையர் தமது பொய்
மனத்தை நம்பிய சிறியனை வெறியனை
விரைப்ப தந்தனில் அருள்பெற நினைகுவ துளதோதான்

குடத்தை வென்றிரு கிரியென எழில்தள
தளத்த கொங்கைகள் மணிவட மணிசிறு
குறக்க ரும்பின்மெய் துவள்புய னெனவரு வடிவேலா

குரைக்க ருங்கடல் திருவணை யெனமுனம்
அடைத்தி லங்கையி னதிபதி நிசிசரர்
குலத்தொ டும்பட வொருகணை விடுமரி மருகோனே

திடத்தெ திர்ந்திடு மசுரர்கள் பொடிபட
அயிற்கொ டும்படை விடுசர வணபவ
திறற்கு கன்குரு பரனென வருமொரு முருகோனே

செழித்த தண்டலை தொறுமில இயகுட
வளைக்கு லந்தரு தரளமு மிகுமுயர்
திருப்ப ரங்கிரி வளநகர் மருவிய பெருமாளே.

## 9. பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாய்

தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன தனதான.

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில் வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டையெ றிந்திடு கதியோனே
கடமிஞ்சிய னந்தவி தம்புணர்
கவளந்தனை யுண்டுவ ளர்ந்திடு
கரியின்றுணை யென்றுபி றந்திடு முருகோனே
பனகம் துயில் கின்றதி றம்புனை
கடல்முன்புக டைத்தப ரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே
பலதுன்பமு ழன்றுக லங்கிய
சிறியன்புலை யன்கொலை யன்புரி
பவமின்றுக ழிந்திட வந்தருள் புரிவாயே

அனதன் பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட இன்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே
அடல்வந்துமு ழங்கியி டும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டெடன
அதிர்கின்றிட அண்டநெ ரிந்திட வருசூரர்

மனமுந்தழல் சென்றிட அன்றவர்
உடலுங்குட லுங்கிழி கொண்டிட
மயில்வென்றனில் வந்தரு ளுங்கன பெரியோனே
மதியுங்கதி ருந்தட வும்படி
உயர்கின்றவ னங்கள்பொ ருந்திய
வளமொன்றுப ரங்கிரி வந்தருள் பெருமானே.

## 10. செம்பதம் பணிந்தி ரென்று மொழிவாய்

தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த
தந்தனந் தனந்த தந்த தனதான

சந்தனந் திமிர்ந்த ணைந்து
குங்குமங் கடம்பி லங்கு
சண்பகஞ் செறிந்தி லங்கு திரடோளும்
தண்டையஞ் சிலம்ப லம்ப
வெண்டையஞ் சலன்ச லென்று
சந்தமன் சதங்கை கொஞ்ச மயிலேறி

திந்திமிந் திமிந்தி மிந்தி
தந்தனந் தனந்த னென்று
சென்றசைந் துகந்து வந்து க்ருபையோடே
சிந்தையங் குலம்பு குந்து
சந்ததம் புகழ்ந்து ணர்ந்து
செம்பதம் பணிந்தி ரென்று மொழிவாயே

அந்தமந் திகொண்டி லங்கை
வெந்தழிந் திடும்ப கண்டன்
அங்கமுங் குலைந்த ரங்கொள் பொடியாக
அம்பகும் பனுங்க லங்க
வெஞ்சினம் புரிந்து கன்ற
அம்புகொண் டுவென்ற கொண்டல் மருகோனே

இந்துவுங் கரந்த தும்பை
கொன்றையுஞ் சலம்பு னைந்தி
டும்பரன் சிலம்ப மர்ந்த குமரேசா
இந்திரன் பதம்பெ றண்டர்
தம்பயங் கடிந்து முந்த
எங்கணுங் கமழ்ந் திருந்த பெருமாளே.

## 11. திருப்பரங்குன்ற மேவு பெருமான்

தனத்தனந் தந்ததான தனத்தனந் தந்ததான
தனத்தனந் தந்ததான தனதான.

வரைத்தடங் கொங்கையாலும் வளைப்படுஞ் செய்கையாலும்
மதர்த்திடுங் கொண்டையாலும் அனைவோரும்
வடுச்செயுந் தொண்டையாலும் விரைத்திடும் கொண்டையாலும்
மருட்டிடுஞ் சிந்தை மாதர் வசமாகி
எரிப்படும் பஞ்சுபோல மிகக்கெடுந் தொண்டனேனும்
இனற்படுந் தொந்தவாரி கரையேற
இசைத்திடுஞ் சந்தபேத மொலித்திடும் தண்டைசூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே
சூரர்க்குவஞ் சஞ்செய்சூரன் இளக்ரவுஞ் சந்தனோடு
துளக்கெழுந் தண்டகோளம் அளவாகத்
துரத்தியன் றிந்த்ரலோகம் அழித்தவன் சம்ரதாயங்
கெடப்பெருஞ் சண்டவேலை விடுவோனே
செருக்கெழுந் தும்பர்சேனை துளக்கவென் றண்டமூடு
தெழித்திடுஞ் சங்கபாணி மருகோனே
தினைப்புனஞ் சென்றுலாவு குறத்தியின் பம்பராவு
திருப்பரங் குன்றமேவு பெருமாளே.

## 12. அன்புற்றிடுவேன்

தந்தனந் தந்தத் தனதான.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

## 13. இனியுன்றன் மலர்ந்திலகும்பதம் அடைவேன்

தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன தனதான:

சருவும்படி வந்தன னிங்கித
மதனின்றிட அம்புலி யுஞ்சுடு
தழல் கொண்டிட மங்கையர் கண்களில் வசமாகிச்
சயிலங்கொளு மன்றல்பொ ருந்திய
பொழிலின்பயில் தென்றலு மொன்றிய
தடவஞ்சுனை துன்றியெ ழுந்திட இதமாவே

இரவும்பக லந்தியு நின்றிடு
குயில்வந்திசை தெந்தென வென்றிட
இருகண்கள்து யின்றிட லின்றியும் அயர்வாகி
இவணெஞ்சுப தன்பத னென்றிட
மயல்கொண்டுவ ருந்திய வஞ்சகன்
இனியுன்றன்ம லர்ந்தில கும்பதம் அடைவேனோ

திருவொன்றிவி ளங்கிய அண்டர்கள்
மனையின்தயி ருண்டவ ணெண்டிசை
திகழும்புகழ் கொண்டவன் வண்டமிழ் பயில்வோர்பின்
திரிகின்றவன் மஞ்சுநி றம்புனை
பவன்மிஞ்சுதி றங்கொள வென்றடல்
செயதுங்கமு குந்தன் மகிழ்ந்தருள் மருகோனே

மருவுங்கடல் துந்துமி யுங்குட
முழவங்கள்கு மின்குமி னென்றிட
வளமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே
மதியுங்கதி ரும்புய லுந்தின
மறுகும்படி அண்டமி லங்கிட
வளர்கின்றப ரங்கிரி வந்தருள் பெருமானே.

## 14. திருப்பரங்கிரிதனிலுறைசரவணப்பெருமாளே

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான:

அருக்கு மங்கையர் மலரடி வருடியும்
கருத்த றிந்தபின் அரைதனி லுடையினை
அவிழ்த்தும் அங்குள அரசிலை தடவியும் இருதோளுற்
றணைத்து மங்கையின் அடிதொறு நகமெழ
உதட்டை மென்றுப லிடுகுறி களுமிட
அடிக்க ளந்தனில் மயில்குயில் புறவென மிகவாய்விட்

டுருக்கு மங்கியின் மெழுகென வுருகிய
சிரத்தை மிஞ்சிடு மனுபவ முறுபலம்
உறக் கையின்கனி நிகரென இலகிய தனமேல்வீழ்ந்
துருக்க லங்கிமெ யுருகிட அமுதுகு
பெருத்த உந்தியின் முழுகிமெ யுணர்வற
உழைத்தி டுங்கன கலவியை மகிழ்வது தவிர்வேனே

இருக்கு மந்திர மொழிவகை முனிபெற
உரைத்த சம்ப்ரம சரவண பவகுக
இதத்த இங்கித மிலகிய அறுமுக எழில்வேளென்
றிலக்க ணங்களும் இயலிசை களுமிக
விரிக்கு மம்பல மதுரித கவிதனை
இயற்று செந்தமிழ் விதமொடு புயமிசை புனைவோனே

செருக்கு மம்பல மிசைதனி லசைவுற
நடித்த சங்கரர் வழிவழி யடியவர்
திருக்கு ருந்தடி அருள்பெற அருளிய குருநாதா
திருக்கு ழந்தையு மெனஅவர் வழிபடு
குருக்க ளின்திற மெனவரு பெரியவ
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

## 15. கணபதியுடன் வரும் இளையோனே

கறுக்கு மஞ்சன விழியிணை அயில்கொடு
நெருக்கி நெஞ்சற எறிதரு பொழுதொரு
கனிக்கு ளின்சுவை அமுதுத மொருசிறு நகையாலே
களக்கொ ழுங்கலி வலைகொடு விசிறியும்
மனைக்கெ ழுந்திரு மெனமன முருகவொர்
கவற்சி கொண்டிட மனைதனி லழகொடு கொடுபோகி

நறைத்த பஞ்சணை மிசையினில் மனமுற
அணைத்த கந்தனி லிணைமுலை எதிர்பொர
நகத்த ழுந்திட அமுதிதழ் பருகியு மிடறூடே
நடித்தெ ழுங்குரல் குமுகுமு குமுவென
இசைத்து நன்கொடு மனமது மறுகிட
நழுப்பு நஞ்சன சிறுமிகள் துயரற அருள்வாயே

நிறைத்த தெண்டிரை மொகுமொகு மொகுவென
உரத்த கஞ்சுகி முடிநெறு நெறுநெறுவென
நிரைத்த அண்டமு கிடுகிடு கிடுவென வரைபோலும்
நிவத்த திண்கழல் நிசிசர ருரமொடு
சிரக்கொ டுங்குவை மலைபுரை தரஇரு
நிணக்கு ழம்பொடு குருதிகள் சொரிதர அடுதீரா

திறற்க ருங்குழ லுமையவ ளருளுறு
புழக்கை மன்கட கயமுக மிகவுள
சிவக்கொ ழுந்தன கணபதி யுடன்வரும் இளையோனே
சினத்தொ டுஞ்சம னுதைபட நிறிவிய
பரற்கு ளன்புறு புதல்வநன் மணியுகு
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

## 16. தேவர் பணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே

தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன
தானன தந்தன தந்தனந் தந்தன தனதான

காதட ருங்கயல் கொண்டிசைந் தைம்பொறி
வாளிம யங்கம னம்பயந் தந்திருள்
கால்தர இந்துவி சும்பிலங் கும்பொழு தொருதோடி

காய்கதி ரென்றொளிர் செஞ்சிலம் புங்கணை
யாழியு டன்கட கந்துலங் கும்படி
காமனெ டுஞ்சிலை கொண்டடர்ந் தும்பொரு மயலாலே

வாதுபு ரிந்தவர் செங்கைதந் திங்கித
மாகந டந்தவர் பின்திரிந் துந்தன
மார்பில முந்தவ ணைந்திடும் துன்பம துழலாதே

வாசமி குந்தக டம்பமென் கிண்கிணி
மாலைக ரங்கொளு மன்பர்வந் தன்பொடு
வாழிநி தம்புனை யும்பதந் தந்துன தருள்தாராய்

போதிலு றைந்தருள் கின்றவன் செஞ்சிர
மீதுத டிந்துவி லங்கிடும் புங்கவ
போதவ ளஞ்சிவ சங்கரன் கொண்டிட மொழிவோனே

பூதமு டன்திகழ் சங்கினங் கொண்டகி
ரீவம டைந்தபு ரந்தரன் தந்தருள்
பூவைக ருங்குற மின்கரந் தங்குப னிருதோளா

தீதக மொன்றினர் வஞ்சகந் துஞ்சியி
டாதவர் சங்கரர் தந்தவன் பும்பல
சேர்திரு தன்குல மஞ்சமுன் சென்றிடு திறலோனே

சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை பெருமாளே

உ

முருகன் துணை

# திருச்செந்தூர்

## இரண்டாம்படை வீடு

திருநெல்வேலிக்குக் கிழக்கே சுமார் நாற்பது மைல் தூரத்தில் ''திருச்சீரலைவாய்'' இருக்கின்றது. இத்தலத்தைத் தமிழ் ஈழக்குடாக்கடல் அலைகள் ஓயாது தழுவிக் கொண்டிருக்கின்றன. இதுவே திருச்செந்தூர். இரண்டாம்படை வீடு.

அலைகள் தழுவும் இப்பதியை நக்கீரர், திருமுருகாற்றுப் படையில் ''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்'' என விதந்து கூறியுள்ளார்.

''பருமணி வயிரமுத்தம் பலவளம் பிறவும் ஆழித்
திரைஎறி அலைவாய் ஆகும் செந்திமா நகரம்''

என, கந்தபுராணம் தந்த கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் சிறப்பித்துச் சொல்லியுள்ளார்.

தேவர்களைத் துன்பக்கடலிலாழ்த்திய சூரபத்மனுடன் பாலசுப்பிரமணியப்பெருமான் போருக்கு எழுந்தருளிவரும் போதுவழியில் எதிர்ப்பட்ட தாரகாசுரனையும்கிரௌஞ்சமலையையும் அழித்துத்திருச்செந்தூரையடைந்து இங்கு விஸ்வகர்மாவினால் வகுக்கப்பட்ட ஆலயத்தில் எழுந்தருளினார். இங்கு தேவகுருவாகிய வியாழபகவான் சுப்பிரமணியப்பெருமானுக்குப்பூசைசெய்து பூசித்தார். திருச்செந்தூரில் சுப்பிரமணியப் பெருமான் தங்கியிருந்து அசுரர்களின் வரலாறுகளையெல்லாம் கேட்டறிந்து, சூரனையுந் துணைவரையும் நல்வழிப்படுத்தி ஆட்கொள விரும்பினார். இதற்காக வீரவாகு தேவரை சூரபத்மனிடம் தூதனுப்பி அறிவுரைகளை வழங்கச்செய்தார். அறிவுரைகளின் ஆற்றலை அறியாத சூரபத்மன் ஆணவ முனைப்பின் வழியே சென்றுகொண்டிருந்தான். இதைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடமையைச் செய்யக்குமாரக் கடவுள் திருச்செந்தூரிலிருந்து போருக்குப் புறப்பட்டு வெற்றி ஈட்டி மீண்டும் திருச்செந்தூர் வந்து தங்கினார் என்பது புராணவரலாறு.

போரில் மாமரமாய் நின்ற சூரபத்மன் பிளவுபட்ட இடம் மாப்பாடு. இது திருச்செந்தூரிலிருந்து ஆறுமைல் தூரத்தில் கடற்கரையோரமாகவுள்ளது. இந்த இடத்தில் இன்றும் மாமரங்கள் வளர்வதில்லை எனக் கூறுகின்றனர்கள்.

சூரசங்காரம் முடிந்ததும் சுப்பிரமணியப் பெருமான் இப்பதியில் எழுந்தருளி சிவபூசை செய்தார். சிவபூசைக்கான தீர்த்தத்தை தமது கைவேலினல் தோற்றுவித்தார். இதுவே ஸ்கந்தபுஷ்கரணி தீர்த்தம். இது இப்பொழுது நாழிக்கிணறு என்னும் பெயருடன் விளங்குகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தியாகிய பாலசுப்பிரமணியர் அபயம், வரதம், உருத்திராக்கம், புஷ்பம் விளங்கும் திருக்கரங்களுடன், சிவபூசை செய்யும் தியானத் திருக்கோலத்தி லெழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். இத்திருக்கோலம் இத்தலத்திற்கே உரித்தான தனித்திருக்கோலமாக விளங்குகின்றது.

அடியார்க்கெளியவராகிய சுப்பிரமணியப் பெருமான் ஆறுமுகங்களுடனும் பன்னிருதிருக்கரங்களுடனும் செந்திலில் எழுந்தருளியுள்ள புதுமையை — மெய்ம்மையை அறிந்து அனுபவித்த நக்கீரர் ஆறுமுகங்களிலும் பொலிந்துள்ள முருகனது அருட்கருணையை இப்படிச்சொல்லி எம்மையும் முருகனிடத்து அழைத்துச் செல்கின்றார்.

"மாஇருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்த வரம்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட்டன்றே,
(ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே"
—திருமுருகாற்றுப்படை

திருச்செந்தூரான் திருவடி சரணம்.

மு. க.

# திருச்செந்தூர்

## இரண்டாம்படைவீடு

### 17. செம்பொன் மயில்மீதிலே எப்போதுவருவாய்

தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான தனதான;

முந்துதமிழ் மாலை கோடிக்கோடி
சந்தமொடு நீடு பாடிப்பாடி
முஞ்சர் மனைவாசல் தேடித்தேடி உழலாதே
முந்தை வினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத்தானு முனைமீதே
திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்சணகு சேகு தாளத் தோடு நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅனு கூல பார்வைத் தீர
செம்பொன் மயில் மீதி லேயெப்போது வருவாயே
அந்தண்மறை வேள்வி காவற்கார
செந்தமிழ் சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே
அஞ்சலி செய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ் சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக்கார
செந்தில் நகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.

## 18. சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே

தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் தனதான.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்தத முவந்துகண் டரிவையர்க்
கன்புரு குசங்கதந் தவிரமுக் குணமாள

அந்திப கலென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்

செந்திலை உணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை அறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெ ருகுந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவ ரவென்றுநின் தெரிசனைப் படுவேனோ

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடி யவம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்பிரபைவீசத்

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ் செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

## 19. மாயன்தன் நன்மருகோனே

தானதா னந்தனந் தானதா னந்தனந்
தானதா னந்தனந் தனதான.

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலினார் தந்துடன் கொடுபோக
காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சூடுங்
கானமே பின்தொடர்ந் தலறுமுன்
சூலம்வாள் கண்டுசெஞ் செவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்பும்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்
ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமீ கண்டுயின்
றுதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே.

## 20. பரமேசுரன் அருள்பாலா

தனனா தனந்த தனதான.

வரியார் கருங்கண் மடமாதர்
மகவா சைதொந்த மதுவாகி
இருபோ துநைந்து மெலியாதே
இருதா ளினன்பு தருவாயே
பரிபா லனஞ்செய் தருள்வோனே
பரமே சுரன்ற னருள்பாலா
அரிகே சவன்றன் மருகோனே
அலைவா யமர்ந்த பெருமாளே.

## 21. திங்களரவு நதிசூடிய பரமர் தந்த குமர!

தந்த தனன தனனா தனன தன
தந்த தனன தனனா தனன தன
தந்த தனன தனனா தனன தன தனதான.

தொந்தி சரிய மயிரே வெளிற நிரை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்

தொண்டு கிழவ னிவனா ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி

வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி

மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா

திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

## 22. செந்திற் கந்தப் பெருமாளே

தனன தனதனந் தந்தத் தந்தத்
தனன தனதனந் தந்தத் தந்தத்
தனன தனதனந் தந்தத் தந்தத் தனதான.

பதும விருசரண் கும்பிட் டின்பக்
கலவி நலமிகுந் துங்கக் கொங்கைப்
பகடு புளகிதந் துன்றக் கன்றிக் கயல்போலும்

பரிய கரியகண் செம்பொற் கம்பிக்
குழைகள் பொரமருண் டின்சொற் கொஞ்சிப்
பதற விதமுறுங் கந்தக் கொந்துக் குழல்சாயப்

புதுமை நுதிநகம் பங்கத் தங்கத்
தினிது வரையவெண் சந்தத் திந்துப்
புருவ வெயர்வுடன் பொங்கக் கங்கைச் சடைதாரி

பொடிசெய் தருள்மதன் தந்த்ரப் பந்திக்
கறிவை இழவிடும் பண்புத் துன்பப்
பொருளின் மகளிர்தம் மன்புப் பண்பைத் தவிரேனே

திதிதி தததடந் திந்தித் தந்தட்
டிடிடி டடடடண் டிண்டிட் டண்டத்
தெனன தனதனந் தெந்தத் தந்தத் தெனனான

திகுர்தி தகிர்ததிந் திந்தித் திந்தித்
திரிரி தரரவென் றென்றெப் பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக் கண்டச் சுவர்சோரச்

சதியில் வருபெருஞ் சங்கத் தொங்கற்
புயவ சுரர்வெகுண் டஞ்சிக் குஞ்சித்
தலைகொ டடிபணிந் தெங்கட்குன் கட்க்ருபைதாவென்

சமர குமரகஞ் சஞ்சூற் றுஞ்செய்ப்
பதியில் முருகமுன் பொங்கித் தங்கிச்
சலதி அலைபொருஞ் செந்திற் கந்தப் பெருமாளே.

## 23. சீரலை வாயுகந்த பெருமாளே

தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த தனதான:

பூரண வார கும்ப சீதப டீர கொங்கை
மாதர்வி கார வஞ்சலீலையி லேயு ழன்று
போதவ மேயிழந்து போனது மான மென்ப தறியாத

பூரியனாகி நெஞ்சு காவல்படாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு மாசையி லேயழுந்து மயல்தீரக்

காரண காரியங்க ளானதெ லாமொ ழிந்து
யானெனு மேதை விண்டு பாவக மாயிருந்து
காலுட லூடி அங்கி நாசியின் மீதிரண்டு விழிபாயக்

காயமு நாவு நெஞ்சு மோர்வழியாக அன்பு
காயம் விடாம லுன்றன் நீடிய தாள்நினைந்து
காணுதல்கூர்தவஞ்செய்யோகிகளாய்விளங்க அருள்வாயே

ஆரண சார மந்த்ர வேதமெ லாம் விளங்க
ஆதிரை யானு நின்று தாழ்வனெனாவ ணங்கும்
ஆதர வால்விளங்கு பூரண ஞான மிஞ்சும் உறவோனே

ஆர்கலி யூடெழுந்து மாவடி வாகிநின்ற
சூரனை மாள வென்று வானுல காளுமண்ட
ரானவர் கூரரந்தை தீரமு னுள்மகிழ்ந்த முருகேசா

வாரண மூலமென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடிடங்கர் பாழ்படவே யெறிந்த
மாமுகில் போலிருண்ட மேனிய னாமுகுந்தன் மருகோனே

வாலுகமீது வண்ட லோடிய காலில்வந்து
சூல்நிறை வானசங்கு மாமணி ஈன உந்து
வாநிதி நீர்பரந்த சீரலை வாயு கந்த பெருமாளே.

## 24. அறிவிலேன் அறியும்படி அருள்புரிவாய்

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன தனதான;

புகரில் சேவல செங்கர சங்கம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாளா

புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயசு பூதர வென்றிரு கண்புனல்
பொழிய மீமிசை அன்புது ளும்பிய மனமாகி

அகில பூதவுடம்பு முடம்பினில்
அமருமாருயி ருங்கர ணங்களும்
மவுன வார்வமி குந்துதொ ழுந்தனி உணர்வாலே

அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
அறிவி லேனறி யும்படி என்றருள் புரிவாயே

மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலையின் மாருத மும்பல வும்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடும்

மதுக ராரவ சிஞ்சினி யுங்கன
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராசனும் வெந்து விழும்படி முனிபால

முகுள் விலோசன முஞ்சிறு திங்களு
முதுபகிரதி யும்புனை யுஞ்சடை
முடியர் பாதியு டம்பில் விளங்கிய அபிராமி

முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரியெ னம்பிகை தந்தருள்
முருகனேவளர் செந்திலில் வந்தருள் பெருமானே;

## 25. சரவணபவ நம

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான

களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமும் விரவிய விழியினர்
கழுவு சரிபுழு கொழுகிய குழலினர் எவரோடும்

கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிழைஞரை வழிகொடு மொழிகொடு
தளரவிடுபவர் தெருவினி லெவரையும் நகையாடிப்

பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி லுடையினி லழகொடு திரிபவர்
பெருகு பொருள்பெறி லமளியி லிதமொடு குழைவோடே

பிணமு மணைபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை உடையவர் உறவினை விடஅருள் புரிவாயே

அனையி லுறைபுலி பெறுமக வயிறரு
பசுவி னிரைமுலை அமுதுண நிரைமகள்
வசவ னெடுபுலி முலையுண மலையுடன் உருகாநீள்

அடவி தனிலுள உலவைகள் தளிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம்வர விரல்சேரேழ்

துளைகள் விடுதழை விரன்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி உடையவ னெடியவன் மனமகிழ் மருகோனே

துணைவ குணதர சரவண பவநம
முருக குருபர வளரறு முககுக
துறையி லலையெறி திருநக ருறைதரு பெருமாளே.

## 26. சிந்தைக் கினியோனே

தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத் தனதான;

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநிரம்பிச்
சூழ்பொருள் தேடிட ஓடிவருந்திப் புதிதான

தூதொடு நான்மணி மாலைப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறியழுந்தித்
தோழுறு லோபியர் வாசல்தொ றும்புக் கலமாருங்

காலனை வினை நீதிகெ டும்பொய்க்
கோளனை மானமி லாவழி நெஞ்சக்
காதக கோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்

காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ

பாலன மீதும ணுன்முக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடிப்

பாவியி ராவண னுர்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே

சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்

சேலொடு வாளைவ ரால்கள்கி ளம்பித்
தாறுகொள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

## 27. முத்தமிழை ஆயும் வரிசைக்காரன்

தத்ததன தானதன தத்தான
தத்ததன தானதன தத்தான
தத்ததன தானதன தத்தான தனதான;

சத்தமிகு மேழுகட லைத்தேனை
உற்றமது தோடுகனை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு

தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவிளை வானகடு வைச்சீறு
தத்துகளும் வானையடு மைப்பாவு விழிமாதர்

மத்தகிரி போலுமொ ளிர்வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்ரகிரி ரீடதிகர் செப்பான தனமீதே

வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வஜ்ரமயில் மீதிலினி எப்போது வருவாயே

சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பனு வற்கார
திக்கினும்ந டாவுபுர விக்கார குறமாது

சித்தஅநு ராககல விக்கார
துட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள்

முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைநிகர் தூயவனி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான

முத்தமிழை ஆயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்துலவு வேலைநகர் மூத்தேவர் பெருமாளே.

## 28. மந்திர உபதேச மகிமைக்காரன்

தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான
தந்ததன தான தனதத் தான தனதான.

சந்தனச வாது நிறைகற் பூர
குங்குமப டீர விரைகத் தூரி
தண்புழுக ளாவு களபச்சித வெகுவாசச்

சண்பக கலார வகுளத் தாம
வம்புதுகி லார வயிரக் கோவை
தங்கியக ரே தரவித் தார பரிதான

மந்தரம தான தனமிக் காசை
கொண்டுபொருள் தேடு மதிநிட் டூர
வஞ்சகவி சார இதயப் பூவை அனையார்கள்

வந்தியிடு மாய விரகப் பார்வை
அம்பிலுளம் வாடு மறிவற் றேனை
வந்தடிமை யாள இனிஎப் போது நினைவாயே

இந்த்ரபுரி காவல் முதன்மைக் கார
சம்ப்ரமம யூர துரகக் கார
என்று மக லாத இளமைக்கார குறமாதின்

இன்பஅநு போக சரசக் கார
வந்தஅசு ரேசர் கலகக் கார
எங்களுமை சேயெ னருமைக் கார மிகுபாவின்

செந்தமிழ்சொல் நாலு கவிதைக்கார
குன்றெறியும் வேலின் வலிமைக் கார
செஞ்சொலடி யார்கள் எளிமைக்கார எழில்மேவும்

திங்கள்முடி நாதர் சமயக் கார
மந்த்ரஉப தேச மகிமைக் கார
செந்தில் நகர் வாழும் அருமைத் தேவர் பெருமாளே.

## 29. அரகரா சிவ சங்கர சங்கர

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன தனதான

அளக பாரம் அலைந்து குலைந்திட
வதனம் வேர்வு துலங்கி நலங்கிட
அவச மோகம்வி ளைந்து தளைந்திட அணைமீதே

அருண வாய்நகை சிந்திய சம்ப்ரம
அடர்ந காநுதி பங்கவி தஞ்செய்து
அதர பானம் அருந்தி மருங்குற முலைமேல்வீழ்ந்

துளமும் வேறுப டும்படி ஒன்றிடு
மகளிர் தோதக இன்பின் முயங்குதல்
ஒழியு மாறுதெ ளிந்துள மன்பொடு சிவயோகத்

துருகு ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்கரு தங்கொள்சி லம்பணி
உபய சீதள பங்கய மென் கழல் தருவாயே

இளகி டாவளர் சந்தன குங்கும
களப பூரண கொங்கைந லம்புனை
இரதிவேள்பணி தந்தையும் அந்தண மறையோனும்

இனிது ருதெதி ரிந்திர னண்டரும்
அரக ராசிவ சங்கர சங்கர
எனமி காவரு நஞ்சினை உண்டவர் அருள்பாலா

வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரமன்
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே

மதுர வாசக மிஞ்சிய கிஞ்சுக
இதழி மாதுமை மைந்த இரும்பொழில்
மயிலின் மீதினில் வந்துறை செந்தியின் பெருமானே.

## 30. உமை மைந்தனே எந்தை இளையோனே

தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த தனதான;

மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி ஏதுஞ்செ யாவஞ்சி அதிபார

மோகநினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடவரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துளதாகி

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்கண்
நாமமதி மீதி லூறுங்க லாவின்ப அமுதூறல்

நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி ஏறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ டனல்வாயு

காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை ஏறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து தொழுமாது

வாளமுழு தாளு மோர்தண்டு ழாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி ஞளின்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெந்தை இளையோனே

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவினை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற பெருமாளே;

## 31. வந்து நின்பொற்கழல் தாராய்

தந்தா னந்தா தந்தா னந்தா
தந்தா னந்தத் தனதான.

தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மானுர்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்
மண்டோ யந்தி மென்கால் விண்டோய்
வன்கா யம்பொய்க் குடில்வேறுய்
வன்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்
கொண்டா டும்பேர் கொண்டா டுஞ்சூர்
கொன்றுய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
குன்று மன்றற் கிரியோனே
கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே.

## 32. செந்திற் கந்தப் பெருமாளே

தனதன தனதன தந்தத் தந்தத் தனதான.

பரிமன களபசு கந்தச் சந்தத் தனமானுர்
படையம படையென அந்திக்குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை இன்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
செயசெய ஹரஹரசெந்திற் கந்தப் பெருமாளே.

உ

சிவமயம்

# பழநி (திருவாவினன்குடி)

## மூன்றும் படைவீடு

திருமகள், காமதேனு, சூரியன், பூமாதேவி, அக்கினிதேவன் முதலானோர் முருகப்பெருமானை நினைந்து தவஞ்செய்த இடம் (திரு, ஆ, இனன்குடி) திருவாவினன்குடி. இது பழநி முருகப்பெருமானின் மூன்றும் படைவீடு.

பழநிமலை அடிவாரத்தில் திருவாவினன்குடி ஆலயமும் இதன் வடகீழ்ப் பகுதியில் சரவணப்பொய்கையும் இருக்கின்றன. சிவகிரியான பழநிமலை உச்சியில் ஞானதண்டாயுதபாணி எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரிகின்றார். சுமார் நானூற்றைம்பது அடி உயரமான சிவகிரியென்னும் பழநிமலை உச்சியில் தண்டாயுதபாணியாக முருகப்பெருமான் எழுந்தருளிக் காட்சி தருகின்றார். தண்டாயுதபாணியாகவிருந்தருள் புரியும் முருகன் திருக்கோலத்தைப் பழநிப் புராணத்திலுள்ள கீழ்க்காணும் பாடலால் அறிந்து சிந்தை செய்வோம்.

"ஆரநூபுர வடியு முடிமிசை யொண்மீக் குடுமியழகுந்தண்டு
சேரவோர் கரனுமொக்கல் சேர்த்தியதோர் கரனுமெழில்
[சிறக்கமென்றார்ப்
பாரணுதிபர் விபுதர் பரவு சிவகிரிவருபச் சிமத்துவாரச்
சேரர்கோ னலயத்தினின்றிலகு பரஞ்சுடரைச் சிந்தை
[செய்வாம்."

பழநிமலையைச் சுற்றிப் பிரகாரம் அமைந்துள்ளது. முருகனை வேண்டி இங்கு வரும் அடியார்கள் கிரிப்பிரதக்ஷிணம் செய்வதிலும் தவருர்.

ஆண்டிக் கோலத்தில் எழுந்தருளிக் காட்சி தரும் முருகப்பெருமானைத் தரிசனம்செய்ய அடியார்கள் மலை உச்சிக்கு நடந்தும் மின்சார இழுவை வண்டியிலும் செல்வார்கள். திருத்தொண்டு செய்யும் யானை செல்லும் ஒருவழிப் பாதையும் இம்மலையில் உண்டு. நடந்து செல்லுமடியார்கள் தங்கிச் செல்ல மடமும் தாகசாந்தி செய்யத் தண்ணீர்ச்சாலைப் பந்தர்களும் உண்டு.

மலைமீது ஏறிச் செல்பவர்கள் முதலில் இடும்பன் சந்நிதியைத் தரிசித்தே மேல் செல்வார்கள். இந்த இடும்பனே முதலில் காவடி கட்டி வந்து முருகப்பெருமானின் திருவருள் பெற்றதாகவும், அன்று முதலே அடியார்கள் முருகனுக்குக் காவடி எடுத்துச் சென்று வழிபட்டு அருள் பெருக்கும் வழக்கம் ஏற்பட்டதாகவும் நம்பிக்கை நிலவி வருகின்றது.

மலையின் அடிவாரத்தில் இருக்கும் பெரிய கோயில் திருவாவினன்குடி எனப்படும் படைவீடு. பழநிக்குச் செல்லும் அடியார்கள் அடிவாரத்தில் காட்சிதரும் கந்தனையும் மலைமேல் காட்சி கொடுக்கும் பழநியாண்டவரையும் தரிசித்து நல்லருள் பெறுவார்கள்.

ஆவினன்குடிவாழ் அழகியவேலா சரணம்.

மு. க.

## 33. தேவகுஞ்சரி பாகா நமோ நம

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன தனதானு

நாத விந்துக லாதீ நமோ நம
வேத மந்த்ரசொ ரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோ நம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தம யூரா நமோ நம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்
ஈத லும்பல கோலா லபூசையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீபாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி அந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

## 34. ஞானபண்டித நாதா நமோ நம

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன தனதான.

போத கந்தரு கோவே நமோ நம
நீதி தங்கிய தேவா நமோ நம
பூத லந்தனை யாள்வாய் நமோ நம பணியாவும்
பூணு கின்றபி ரானே நமோ நம
வேடர் தங்கொடி மாலா நமோ நம
போத வன்புகழ் சாமீ நமோ நம அரிதான
வேத மந்திர ரூபா நமோ நம
ஞான பண்டித நாதா நமோ நம
வீர கண்டைகொள் தாளா நமோ நம அழகான
மேனி தங்கிய வேளே நமோ நம
வான பைந்தொடி வாழ்வே நமோ நம
வீறு கொண்டவி சாகா நமோ நம அருள்தாராய்
பாத கஞ்செறி சூரா திமாளவெ
கூர்மை கொண்டயி லாலேபொ ராடியே
பார அண்டர்கள் வானுடு சேர்தர அருள்வோனே
பாதி சந்திர னேசூடும் வேணியர்
சூல சங்கர னுர்கீத நாயகர்
பார திண்புய மேசேரு சோதியர் கயிலாயர்
ஆதி சங்கர னுர்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மனோன்மணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டு விருலே சிராடவெ
கோம ளம்பல சூழ்கோ யில்மீறிய
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

## 35. செபமாலை தந்த சற்குரு நாதா

தனதான தந்தனத் தனதானா.

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்றனக் கிளையோனே
இமவான்ம டைந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

## 36. அருள்ஞான இன்பமது புரிவாய்

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன தனதான,

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி னும்பகர்செய் குருநாத
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவலை ந்துழலும்
அடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ ஒன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விநாகோவே
தெவயானை அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திரள்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

## 37. அடியேனை உன்றன் அடிசேர்

*தனனதன தான தந்த தனனதன தான தந்த*
*தனனதன தான தந்த தனதான.*

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதி விதம தாய்வ ளர்ந்து பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை உன்றன் அடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீத ணிந்த மகதேவா
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த பெருமாளே.

## 38. தொழுது வழிபடுமடியர் காவற்காரன்

*தனதனன தனதனன தானத் தானத் தனதான.*

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனெ னாசைப் பாடைத் தவிரேனோ
துரிதமிடு நிருதர்புர சூரைக் காரப் பெருமாளே
தொழுது வழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே.

## 39. பரமனருளால் வளர்ந்த குமரேசா

தனனதன தான தந்த தனனதன தான தந்த
தனனதன தான தந்த தனதான;

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள் பல வேதெ ரிந்து மதனாலே
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலைபெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல் நின்று
அனுதினமும் நாணமின்றி அழிவேனோ
உரகபட மேல்வ ளர்ந்த பெரிய பெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருகோனே
உபயகுல தீப துங்க விருதுகவி ராஜ சிங்க
உறை புகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீள வென்று
பழநிமலை மீதில் நின்ற பெருமாளே;

## 40. பலகலை சிவாகமங்கள் பயில்வோன்

தனனதன தான தந்த தனதான.

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்றன் அருள்தாராய்
சலமருகு பூவை தும்பை அணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழநிமலை வாழ வந்த பெருமாளே.

## 41. அழகார் பழநிவாழ் குமரன்

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தந்ததான;

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆமமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள் பத மேதுணைய தென்று நாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாவெனது
ஈசவென மான முற என்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
ஏவர்புகழ் வார்மறையும் என்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலவணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா
சீறிவரு மாறவுண ராவியுணு மானமுக
தேவர் துணை வாசிகரி அண்டகூடம்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர் வர தாமுருக தம்பிரானே.

## 42. பழய பழநி அமர்வோன்

தனன தனன தனன தனன தனன தனன தனதானா;

கரிய பெரிய எருமை கடவு கடிய கொடிய திரிசூலன்
கறுவி இறுகு கயிறொ டுயிர்கள் கழிய முடுகி எழுகாலம்
திரியு நரியு மெரியு முரிமை தெரிய விரவி அணுகாதே
செறிவு மறிவு முறவு மனைய திகழு மடிகள் தரவேணும்
பரிய வரையி னரிவை மருவு பரம ரருளு முருகோனே
பழன முழவர் கொழுவி லெழுது பழய பழநி அமர்வோனே
அரியு மயனும் வெருவ உருவ அரிய கிரியை எறிவோனே
அயிலு மயிலு மறமு நிறமு மழகு முடைய பெருமாளே.

## 43. பழநிப்பதி ஞானபூரணன்

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன தனதான:

ஆல காலமெ னக்கொலே முற்றிய
வேல தாமென மிக்கவி ழிக்கடை
யாலு மோகம்வி ளேத்துவி தத்துடன் இளேஞோரை

ஆர வாணமெ யிட்டும றித்துவி
கார மோகமெ ழுப்பிய தற்குற
வான பேரைய கப்படு வித்ததி விதமாகச்

சால மாலேய ளித்தவர் கைப்பொருள்
மான வேசிலு கிட்டும ருட்டியெ
சாதி பேதம லத்தழு வித்திரி மடமாதர்

தாக போகமொ ழித்து நினக்கடி
யானென் வேள்விமு கத்தவ முற்றிரு
தாளே நாளும்வ ழுத்திநி னேத்திட அருள்வாயே

வால மாமதி மத்தமெ ருக்கறு
காறு பூளேத ரித்தச டைத்திரு
வால வாயன ளித்தரு ளற்புத முருகோனே

மாய மானுெட ரக்கரை வெற்றிகொள்
வாலி மார்புதொ லேத்திட விற்கொடு
வாளி யேவிய மற்புய னச்சுதன் மருகோனே

நாலு வேதந விற்றுமு றைப்பயில்
வீணே நாதனு ரைத்தவ னத்தட
நாடி யோடுகு றத்தித னேக்கொடு வருவோனே

நாளி கேரம் வருக்கைப ழுத்துதிர்
சோலே சூழ்பழ நிப்பதி யிற்றிரு
ஞான பூரண சத்தித ரித்தருள் பெருமாளே.

## 44. உன் பத்மபாதம் மறவேன்

தனதன தத்த தானன தனதன தத்த தானன
தனதன தத்த தானன தனதான.

கதியைவி லக்கு மாதர்கள் புதியவி ரத்ந பூஷண
கனதன வெற்பு மேல்மிகு மயலான
கவலைம னத்த னுகிலும் உனதுப்ர சித்த மாகிய
கனதன மொத்த மேனியும் முகமாறும்
அதிபல வஜ்ர வாகுவும் அயில்நுனை வெற்றி வேலதும்
அரவுபி டித்த தோகையும் உலகேழும்
அதிரவ ரற்று கோழியும் அடியர்வ ழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமும் மறவேனே
இரவிகு லத்தி ராசத மருவியெ திர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான
இளையவ னுக்கு நீண்முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொட ளித்த ராகவன் மருகோனே
பதினொரு ருத்தி ராதிகள் தபனம்வி ளக்கு மாளிகை
பரிவொடு நிற்கு மீசுர சுரலோக
பரிமள கற்ப காடவி வரியளி சுற்று பூவுதிர்
பழநிம லைக்குள் மேவிய பெருமாளே.

## 45. இகபர சுகம் அருள்வாய்

தனதனன தாத்த தனதான.

வசனமிக வேற்றி மறவாதே
மனது துய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபர செள பாக்யம் அருள்வாயே
பசுபதிசி வாக்யம் உணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும் வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

சிவமயம்

# திருவேரகம் (சுவாமிமலை)

## நான்காம் படைவீடு

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படைவீடு சுவாமிமலை. இதுவே திருவேரகம். அருணகிரிநாத சுவாமிகள் தாம் அருளிய திருப்புகழில்

"ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
ராஜத லக்ஷண லக்ஷுமி பெற்றருள் பெருமாளே"

எனக்கூறி, அற்புதமிக்க திருவேரகமே சுவாமிமலை என்பதைத் தெளிவு பெறச் செய்துள்ளார்கள். இத் திருப்பதி கும்பகோணத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கின்றது.

முருகப்பெருமான் கயிலையங்கிரியில் நவவீரர் முதலானவர்களுடன் ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கு வந்த தேவர்கள் அனைவரும் முருகனை வணங்கிச் சென்றனர். பிரமா முருகப்பெருமானை இளையோன் என எண்ணி வணங்காது சென்றார். பிரமாவின் செருக்கை அடக்கத் திருவுளங்கெண்ட முருகப் பெருமான், வீரவாகுதேவர் மூலம் பிரமாவை அழைத்து வேதம் ஓதும்படி பிரமாவைப் பணித்தார். பிரமாவும் "ஓம்" எனக்கூறி வேதத்தை ஓதத்தொடங்கினார். முருகப்பெருமான் பிரமா வேதம் ஓதுதலை நிறுத்தி முதற்கூறிய "ஓம்" என்னும் சொல்லுக்குப் பொருள் கூறும்படி கட்டளையிட்டார். பிரணவமந்திர சொரூபியாகிய கந்தவேளே பொருளைக் கேட்டார் என்பதை எண்ணித் திகைத்து நின்றார் பிரமா. படைப்புத் தொழிலைச் செய்யும் பிரமா "ஓம்" என்பதன் பொருளை அறியாதிருத்தல் தவறெனக் கூறி, நான்கு தலைகளிலும் குட்டிச் சிறையிலிட்டார். பின்னர் தேவர்கள் படைப்புத் தொழில் செய்ய பிரமாவை அனுமதிக்குமாறு சிவபெருமானை வேண்டினர். சிவபெருமான் பிரமாவை சிறை நீக்கஞ் செய்ய எண்ணினார். இதை அறிந்த முருகப் பெருமானும் பிரமாவைச் சிறையிலிருந்து விட்டார்.

பிரமா அறியமுடியாத பிரணவத்தின் பொருளை கந்தவேள் அறிந்துள்ளதால் இதனைத் தனக்கு உபதேசிக்கும்படி சிவபெருமான் முருகனை வேண்டினார். முருகப் பெருமான் குருமூர்த்தியாகத் தந்தையின் மடி மீதெழுந்தருளி, சிவபெருமான் திருச்செவியில் பிரணவப் பொருளை உபதேசித்துக் குருநாதன், சுவாமிநாதன் என்னும் திருநாமங்களைப் பெற்றார்.

சிவபெருமானுக்குக் குருமூர்த்தியாக இருந்து பிரணவப் பொருள் உபதேசித்த இடம் காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ள சுவாமிமலையாகிய திருவேரகம் என்னும் இத்திருப்பதியே. இதை அருணகிரிநாதர்

குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்கா மிகுத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தி லுறைவா யுமக்கொர்
சிறுவா கரிக்கு மிளையோனே
திருமால் தனக்கு மருகா வரக்கர்
சிரமே துணித்த பெருமாளே

என விதந்து கூறி மகிழ்கின்றார்.

சுவாமிமலைமேல் எழுந்தருளிய முருகனை வழிபடச் செல்லும் அடியார்கள் அறுபது படிகளில் ஏறிச் சுவாமி சந்நிதானத்தை அடைவர். படி ஏறத் தொடங்கும் போது முதற்படியில் தேங்காய் உடைத்து தீபாராதனை செய்து வழிபாடாற்றிய பின்னர் ஏனைய படிகள் வழி ஏறிச் செல்வர். இது பண்டைநாள் வழக்கு. கந்த புராண நிகழ்ச்சிகளை நினைவூட்டும் பல சித்திரங்களை இங்கு சுவர்களில் காணலாம். தினமும் இப்பதிக்குப் பெருந்திரளான அடியார்கள் வந்து சுவாமிநாதப் பெருமானான முருகனை வணங்கி நல்லருள் பெறுகின்றார்கள்.

ஆறெழுத்து அடக்கிய அருமறைமுதல்வா சரணம்.

மு. க.

உ

# திருவேரகம் (சுவாமிமலை)

## நான்காம் படைவீடு

### 46. சுவாமி மலைதனில் உறைவோனே

தான தனதன தான தனதன
தான தனதன தனதான.

பாதி மதிநதி போது வணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனை யணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி அமரர்கள்
சூழ வரவரும் இளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலை தனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

### 47. திருவடி அருள்வாய்

தனதன தனதன தனதானா

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு வடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவல ரசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

## 48. உமையருளால் வளர்ந்த குமரேசா

*தனதன தான தந்த தனதன தான தந்த*
*தனதன தான தந்த தனதான.*

நிலவினி லேயி ருந்து வகைமல ரேதெ ரிந்து
 நிறைகுழல் மீத ணிந்து குழைதாவும்
நிகரறு வேலி னங்கள் வரிதர வாச கங்கள்
 நினைவற வேமொ ழிந்து மதநூலின்
கலபம னேக ரங்க ளளவற வேபு ரிந்து
 கனியித ழேய ருந்தி அநுராக
கலவியி லேமு யங்கி வனிதையர் பால்ம யங்கு
 கபடனை யாள உன்றன் அருள்கூராம்
உலகமொ ரேழு மண்டர் உலகமும் ஈசர் தங்கு
 முயர்கயி லாய மும்பொன் வரைதானும்
உயிரொடு பூதமைந்து மொருமுத லாகி நின்ற
 உமையரு ளால்வ ளர்ந்த குமரேசா
குலைபடு சூர னங்க மழிபட வேலெறிந்த
 குமரக டோர அங்கண் மயில்வாழ்வே
கொடுமுடி யாய்வ ளர்ந்து புயனிலை போலு யர்ந்த
 குருமலை மீத மர்ந்த பெருமாளே.

## 49. சூரனைக் கடிந்த கதிர்வேலா

*தன தத்த தந்த தனதான.*

காமி யத்த ழுந்தி இளையாதே
 காலர் கைப்ப டிந்து மடியாதே
ஓமெ ழுத்தி லன்பு மிகவூறி
 ஓவியத்தி லந்தம் அருள்வாயே
தூம மெய்க்க ணிந்த சுகலீலா
 சூர னைக்க டிந்த கதிர்வேலா
ஏம வெற்புயர்ந்த மயில்வீரா
 ஏர கத்த மர்ந்த பெருமாளே.

## 50. உன் இருதாளிலுற்ற பெருவாழ்வு அருள்வாய்

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த தனதான.

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனு கமத்தின் விரகாலே
மயலே எழுப்பி இதழே அருத்த
மலைபோல் முலைக்குள் உறவாகிப்
பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே
பிழையேபொ றுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்காமி குத்து வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்
திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கும் இளையோனே
திருமால் தனக்கு மருகா அரக்கர்
சிரமே துணித்த பெருமாளே.

## 51. அருமறைத் தமிழ்நூல் தெரிந்துரைக்கும் புலவோன்

தனதன தனனு தனனு தனந்த னத்த தனதானு.

தெருவினில் நடவா மடவார் திரண்டொ ருக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா மதன்தொ டுக்குங் கணையாலே
புளகித முலையால லையாம னஞ்ச லித்தும் விடலாமோ
ஒருமலை இருகூ றெழவே உரம்பு குத்தும் வடிவேலா
ஒளிவளர் திருவே ரகமே உகந்து நிற்கும் முருகோனே
அருமறை தமிழ்நூ லடைவே தெரிந்து ரைக்கும் புலவோனே
அரிஅரி பிரமா தியர்கால் விலங்க விழ்க்கும் பெருமாளே.

## 52. திருவேரகத்தின் முருகோனே

தனதனன தானதத்த தனதனன தானதத்த
தனதனன தானதத்த தனதான.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு மெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

## 53. பரமர்தாம் மெச்சுகின்ற குருநாதா

தானதந் தனதனன தனனதா னத்த தந்த தனதான.

நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து தடுமாறி
ஞானமுங் கெடவடைய வழுவியா ழத்த ழுந்தி மெலியாதே
மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து சுகமேவி
மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று பணிவேனோ
வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற குருநாதா
வாசவன் தருதிருவை ஒருதெய்வா னைக்கி ரங்கு மணவாளா
ஈசகஞ் சுரர்தருவு மகிழுமா வத்தி சந்து புடைசூழுங்
கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்தமர்ந்த பெருமாளே.

## 54. சிவசமய ஆறுமுகனே

*தனனதன தனனதன தனஞ தனத்ததன*
*தனனதன தனனதன தனஞ தனத்ததன*
*தனனதன தனனதன தனஞ தனத்ததன தனதான.*

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனந லுரையுதவு மயிலா எனத்தினமும் உருகாதே
குயில் மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலன வரதமன மெனவே நடப்பர் நகை
கொளுமவர்களுடைமைமனமுடனேபறிப்பவர்கள்அனேவோரும்
தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலேயிலுறு துகில்சரிய நடுவீ திநிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா உழப்பியர்கண் வலேயாலே
சதிசெய்தவ ரவர்மகிழ அணேமீ துருக்கியர்கள்
வசமொழுகி அவரடிமை எனமா தரிட்டதொழில்
தனிலுழலு மசடனேயு னடியே வழுத்த வருள் தருவாயே
சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்த பொழு
தொரு நொடியி லவர்கள் படை கெடவே லெடுத்தவனி
தனில் நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருமீதே
தவனமொடு மலேகநட மிடவீர பத்திரர்கள்
அதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள் பலகோடி
திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்த வெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தை விடு
திமிரதின கரவமரர் பதிவாழ்வு பெற்றுலவு முருகோனே
திருமருவு புயனயனெ டயிரா வதக்குரிசில்
அடிபரவு பழநிமலே கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவே ரகத்திலுறை பெருமாளே.

௨

# குன்றுதோருடல்

## ஐந்தாம் படைவீடு

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலப்பகுதி: வளம் நிறைந்த குறிஞ்சி நிலப்பகுதியை முருகப் பெருமான் விரும்பியுறையும் ஐந்தாம்படை வீடாகக் கொண்டருளினர். ஆறுமுகப் பெருமான் குன்றுகள் தோறும் சென்று விளையாடுவதற்கான உட்பொருள் ஆன்மாக்களின் உய்யுநெறிக்கு வழிகாட்டலேயாகும்: உலக அமைப்பையும் தோற்றத்தையும் ஆழ நோக்குவார்க்குக் ''கல்தோன்றி மண் தோன்ருக் காலம்'' என்ற முதுமொழி உலகில் மலையே முதலில் தோன்றியதாக நினைவுறுத்தும். முதற் பொருளான முருகப் பெருமானும் உலகில் முதற் தோற்றுவித்த மலைகளில் சென்று விளையாடி ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கின்ருர். மாணிக்கவாசகரும் மலைமேல் இறைவனை நினைந்து ''ஆராத இன்பம் அருளுமலை போற்றி'' என உள்ளம் உருகிப் பாடுகின்ருர்.

குன்றுதோருடலில் மலை, ஆற்றங்கரை, சோலை, காடு, குளக்கரை, முச்சந்தி, நாற்சந்தி, மரத்தடி முதலான எல்லா இடங்களிலும் அமைந்துள்ள முருகப் பெருமான் திருக்கோயில்கள் யாவும் இடம்பெறும் என்பர். குன்றுதோருடல் என்னும் தலைப்பில் அருணகிரிநாதர் திருப்புகழில் பல திருப்பதிகளைப் பாடியுள்ளார்; இவற்றுள் தமிழ் நாட்டிலுள்ள திருத்தணி, வயலூர், சுருளிமலை, இளஞ்சி, குன்றக்குடி, விராலிமலை, ஈழநாட்டிலுள்ள கதிர்காமம் முதலான திருப்பதிகள் விசேடமானவை.

இலங்கையின் தென்கீழ்த் திசையில் கதிர்காமத் திருப்பதி உளது. ஈழநாட்டிலுள்ள காலத்தால் முற்பட்ட முருகனாலயங்களுள் இதுவும் ஒன்று. பதினாறும் நூற்றாண்டளவில் இராசசிங்கன் என்னும் அரசன் இத்தலம் கட்டுவதற்கு உதவியாயிருந்தான் எனச் சரித்திரக்காரர் கூறுகின்றார்கள்.

கந்தகழி என்னும் திருநாமத்தைப் பெற்ற முருகன் பெயருக்கேற்ற தன்மையில் கதிர்காமத்தில் விக்கிரகமில்லாமலும், வேறு உருவமில்லாமலும், வேறெவ்வித சின்னமாக இல்லாமல் அருவாய் நிற்கும் நிலையில் வணங்கப்படுகின்றான். இதனாலேயே இலங்கை, இந்தியா ஆகிய இடங்களிலுள்ள முருகன் ஆலயங்களுள் கதிர்காமம் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்கிருபையாகி
இடர்சங் கைகள்க லங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த பெருமாளே

இவ்வாறு பல குன்றுகளிலுமமர்ந்த குமரப் பெருமானின் திருவருளால் நாமும் குன்றாத பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவோம் என்பதை வலியுறுத்தி அருணகிரிநாத சுவாமிகளும் பாடித் துதிக்கின்றார்.

குன்றுதோறாடிய குமரா சரணம்.

மு. க.

உ

# குன்றுதோருடல்

## ஐந்தாம் படை வீடு

## திருவேங்கடம் — 1

### 55. திருவேங்கடமாமலே மேவிய பெருமான்

*தனதாந்தன தானன தானன*
*தனதாந்தன தானன தானன*
*தனதாந்தன தானன தானன தனதான:*

வரிசேர்ந்திடு சேல்கய லோவெனு
முழைவாழ்ந்திடு வேலேயு நீலமும்
வடுவாங்கிடு வாழ்விழி மாதர்கள் வலேயாலே
வளர்கோங்கிள மாமுகை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளமாந்தளிர் போல்நிற மாகிய வடிவாலே
இருள்போன்றிடு வார்குழல் நீழலில்
மயல்சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமே
எனதாந்தன தானவை போயற
மலமாங்கடு மோகவி காரமும்
இவைநீங்கிட வேயிரு தாள்மலர் அருள்வாயே
கரிவாம்பரி தேர்திரள் சேனையும்
உடனுந்துரி யோதன னுதிகள்
களமாண்டிட வேயொரு பாரதம் அதிலேகிக்
கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னுமரி ரகுராமன்
திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடிதோங்கும ராமர மேழொடு
தெசமாஞ்சிர ராவண னுர்முடி பொடியாகச்
சிலேவாங்கிய நாரண னுர்மரு
மகனுங்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலே மேவிய பெருமாளே.

## கயிலைமலை — 2

### 56. நாளும் களிக்கும் நிலை அருள்வாய்

*தானந்த னத்ததன தானந்த னத்ததன*
*தானந்த னத்ததன தனதான.*

தேனுந்து முக்கனிகள் பால்செங்க ருப்பிளநிர்
சீரும்ப ழித்தசிவம் அருளூறத்
தீதும்பி டித்தவினை ஏதும்பொ டிப்பவுறு
சீவன்சி வச்சொரூபம் எனநாடி
நானென்ப தற்றுயிரொ டுனென்ப தற்றுவெளி
நாதம்ப ரப்பிரம ஒளிமீதே
ஞானஞ்சு ரப்பமகி ழானந்த சித்தியொடெ
நாளுங்க ளிக்குநிலை அருள்வாயே
வானந் தழைக்கவடி யேனுஞ்செ ழிக்கவயன்
மாலும்பி ழைக்கவலை விடமாள
வாருங்க ரத்தனெமை ஆளுந்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே
தானந்த னத்ததன னவண்டு சுற்றிமது
தாறுண்க டம்பமலர் அணிமார்பா
தானங்கு றித்துவெமை யாளுந்தி ருக்கயிலை
சாலுங்கு றத்திமகிழ் பெருமாளே.

### 57. நமசிவாயப் பொருளான்

*தனனதனத் தனதான தனனதனத் தனதான.*

புமியதனிற் ப்ரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாளத் தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே.

# திருத்தணிகை — 3

## 58. உன்பாதம் அருள்வாய்

தனனதன தான தனனதன தான
தனனதன தான தனதான.

உடையவர்க ளேவ ரெவர்களென நாடி
உளமகிழ ஆசு கவிபாடி
உமதுபுகழ் மேரு கிரியளவு மான
தெனவுரமு மான மொழிபேசி
நடைபழகி மீள வறியவர்கள் நாளை
நடவுமென வாடி முகம்வேறாய்
நலியுமுன மேயுன் அருணவொளி வீசு
நளினவிரு பாதம் அருள்வாயே
விடைகொளுவு பாகர் விமலர்திரி சூலர்
விகிதர்பர யோகர் நிலவோடே
விளைவுசிறு பூளை நகுதலையொ டாறு
விடவரவு சூடும் அதிபாரச்
சடையிறைவர் காண உமைமகிழ ஞான
தளர்நடையி டாமுன் வருவோனே
தவமலரு நீல மலர்சுனைய நாதி
தணிமலையு லாவு பெருமாளே.

## 59. முத்தமிழிற் பெரியோன்

தனத்த தத்ததனத் தனதான.

நினைத்த தெட்டனையில் தவறாமல்
நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
கனத்த தத்துவமுற் றழியாமல்
கதித்த நித்தியசித் தருள்வாயே
மனித்தர் பத்தர்தமக் கெளியோனே
மதித்த முத்தமிழிற் பெரியோனே
செனித்த புத்திரரிற் சிறியோனே
திருத்த ணிப்பதியிற் பெருமாளே.

## 60. திருத்தணிமாமலை மேவிய பெருமான்

தாத்தன தத்தன தானன தானன
தாத்தன தத்தன தானன தானன
தாத்தன தத்தன தானன தானன தனதான.

தாக்கம ருக்கொரு சாரையை வேறொரு
சாக்ஷிய றப்பசி யாறியை நீறிடு
சாஸ்த்ரவ ழிக்கதி தூரனை வேர்விழு தவழும்

தாற்பரிய மற்றுழல் பாவியை நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகள்
சாற்றுத மிழ்க்குரை ஞாளியை நாள்வரை தடுமாறிப்

போக்கிட மற்றவ்ரு தாவனை ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை மாமருள்
பூத்தம லத்ரய பூரியை நேரிய புலையேனைப்

போக்கிவி டக்கட னேநர கோகதி
போய்ப்பெறு கைக்கிலை யோகதி யானது
போர்ச்சுட வஜ்ரவை வேல்மயி லாவருள் புரிவாயே

மூக்கறை மட்டைம காபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளியு தாசனி
மூர்க்ககு லத்திவி பீஷணர் சோதரி முழுமோடி

மூத்தவ ரக்கனி ராவண னேடியல்
போற்றிவி டக்கம லாலய சீதையை
மோட்டன் வலைத்தொரு தேர்மிசையேகொடு முகிலேதோய்

மாக்கன சித்திர கோபுர நீள்படை
வீட்டிலி ருத்திய நாளவன் வேரற
மார்க்கமு டித்தவி லாளிகள் நாயகன் மருகோனே

வாச்சிய மத்தள பேரிகை போல்மறை
வாழ்த்தம லர்க்கமு நீர்தரு நீள்சுனை
வாய்த்ததி ருத்தணி மாமலை மேவிய பெருமாளே.

## 61. பவரோக வைத்தியநாதப் பெருமான்

*தனதான தனத்தன தான*
*தனதான தனத்தன தான*
*தனதான தனத்தன தான தனதான.*

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி அதனூடே

நெடுநாளு முழைப்புள தாகிப்
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணித் துதியாமல்

தலையான உடற்பிணி ஊறிப்
பவநோயி னலைப்பல வேகிச்
சலமான பயித்திய மாகித் தடுமாறித்

தவியாது பிறப்பையு நாடி
அதன்வேரை அறுத்துனை ஓதித்
தலமீது பிழைத்திட வேநின் அருள்தாராய்

கலியாண சுபுத்திர னாகக்
குறமாது தனக்கு விநோதக்
கவினுரு புயத்திலு லாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை தேடு
மடியேனு னருட்பெற வேவை
கடனாகு முனக்கரு ளான முருகோனே

பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாது திருப்புகழ் கூறிப்
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

பதியான திருத்தணி மேவு
சிவலோக சிமனப்பரி வேறு
பவரோக வைத்திய நாத பெருமாளே.

## 62. பிறவிகள் தோறும் அலையாதபடி அருள்

தனதன தான தனதன தான
தனதன தான தனதான.

இருமலு ரோக முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமேநீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
எழுகள மாலை இவையோடே
பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்
பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்கள் அருள்வாயே
வருமொரு கோடி அசுரர்ப தாதி
மடியவ நேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா
சலமிடை பூமி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

## 63. உன்புகழ் உரைக்குஞ் செயல் அருள்

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்
தனத்தன தனத்தந் தனதான.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம் யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
 தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்கும்
 தளத்துட னடக்கும் கொடுசூரர்
சினத்தையு முடற் சங்கரித்தம லேமுற்றுஞ்
 சிரித்தெரி கொழுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தொடு சுகித்தொண்
 திருத்தணி யிருக்கும் பெருமாளே.

## வள்ளிமலை — 4

### 64. வள்ளி மணவாளன்

*தையதன தான தையதன தான*
*தையதன தானத் தனதான.*

அல்லிவிழி யாலு முல்லைநகை யாலு
 மல்லல் பட ஆசைக் கடலீயும்
அள்ளவினி தான நள்ளிரவு போலு
 முள்ளவினை யாரத் தனமாரும்
இல்லுமிளை யோரு மெல்லவய லாக
 வல்லெருமை மாயச் சமனாரும்
எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளி
 லுய்யவொரு நீபொற் கழல்தாராய்
தொல்லைமறை தேடி இல்லையெனு நாதர்
 சொல்லுமுப தேசக் குருநாதா
துள்ளிவிளை யாடு புள்ளியுழை மேவு
 வெள்ளிவன மீதுற் றுறைவோனே
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
 வல்லவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
 வள்ளிமண வாளப் பெருமாளே.

## திருச்சிராப்பள்ளி — 5

### 65. அநுபூதி நிலை தருவாய்

*தனன தனனத் தனதான.*

பகலி ரவினிற் றடுமாறு
பதிகு ருவெனத் தெளிபோத
ரகசி யமுரைத் தநுபூதி
ரதநி லைதனைத் தருவாயே
இகப ரமதற் கிறையோனே
இயலி சையின்முத் தமிழோனே
சகசி ரககிரிப் பதிவேளே
சரவ ணபவப் பெருமாளே.

---

## விராலிமலை — 6

### 66. விராலி மலைமேல் உலாவும் வேலா

*தனதான தானதத்த தனதான தானதத்த*
*தனதான தானதத்த தந்ததான.*

உருவேற வேசெபித்து ஒருகோடி யோமசித்தி
உடனாக ஆகமத்து கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாமல் ஓரெழுத்தை
ஒழியாம லோதைவிட்டி ருந்துநாளும்
தரியாத போதகத்தர் குருவாவ ரோரொருத்தர்
தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மொழிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை அண்டிலேனே
குருநாடி ராசரிக்கர் துரியோத ஞதிவர்க்க
குடிமாள மாயமிட்ட குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி எழுபாரை ஆளவிட்ட
குறளாக மாகிநெட்டை கொண்டவபதி
மருகாபு ராரிசித்தன் மகனேவி ராலிசித்ர
மலைமேலு லாவுசித்த அங்கைவேலா
மதுராபு ரேசர் மெய்க்க அரசாளு மாறன் வெப்பு
மகூனை யேநிமிர்ந்த தம்பிரானே.

## 67. நாளும் நினைவது பெறவேணும்

தானன தான தான தனதன
தானன தான தான தனதன
தானன தான தான தனதன தனதான.

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்

சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளும் நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்

ஆராத காதல் வேடர் மடமகள்
சீமூத மூர்வ லாரி மடமகள்
ஆராத பூத மாக வலமிட முறைவாழ்வும்

ஆராயும் நீதி வேலு மயிலுமெய்
ஞானாபி ராம சோதி வடிவமும்
ஆபாத னேனும் நாளும் நினைவது பெறவேணும்

ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்

ஈடாய ஊமர் போல வணிகரி
லூடாடி ஆல வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர குருநாதா

கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே

கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.

# திருச்செங்கோடு — 7

## 68. கந்தா என்முன் வரவேணும்

தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த தனதான.

அன்பாக வந்து நின்றுள்ப ணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல்
அன்பால் மிகுந்த நஞ்சாரு கண்க
ளம்போரு கங்கள் முலைதானும்
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்
கொண்டே நினைந்து மன்பேது மின்றி
குன்று மலைந்து மலைவேனோ
மன்றாடி தந்த மைந்தாமி குந்த
வம்பார்க டம்பை அணிவோனே
வந்தேப ணிந்து நின்றார்ப வங்கள்
வன்பேசி னந்த வடிவேலா
சென்றேயி டங்கள் கந்தாவென் முன்பு
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்ச மொன்றுய்வ ளர்ந்த
செங்கோட மர்ந்த பெருமாளே.

## 69. கோடையம் பதிவாழ் மயில்வீரா

தான தந்த தனத்ததத்த தனதான.

ஞால மெங்கும் வளைத்தாற்று கடலாலே
நாளும் வஞ்சி யருற்றுரைக்கும் வசையாலே
ஆல முந்து மதித்தழற்கும் அழியாதே
ஆறி ரண்டு புயத்தணைக்க வருவாயே
கோல மொன்று குறத்தியைத்த பூவுமார்பா
கோடை யம்ப தியுற்றுநிற்கு மயில்வீரா
கால னஞ்ச வரைதுளைத்து முதல்வானோர்
கால்வி லங்கு களைத்தறித்த பெருமாளே.

## கொங்கணகிரி — 8

### 70. குஞ்சரமுகற் கிளைய கந்தன்

*தந்ததன தத்ததன தந்ததன தத்ததன*
*தந்ததன தத்ததன தனதான.*

ஐங்கரனை ஒத்தமன மைம்புலம கற்றிவளர்
அந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமனம் அருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி அருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ அருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைசு புத்தியினை அருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுமுட லுற்றபொருள் அருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே.

---

## கொடுங்குன்றம் — 9

### 71. கொடுங்குன்றந் தங்குந் தம்பிரான்

*தனந்த னந்தந் தந்தந் தந்தந் தந்ததான.*

அனங்க னம்பொன் றஞ்சுந் தங்குங் கண்களாலே
அடர்ந்தெ ழும்பொன் குன்றங் கும்பங் கொங்கையாலே
முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே
முடங்கு மென்றன் தொண்டுங் கண்டின் றின்புறாதோ
தெனந்தெ னந்தென் தெந்தெந் தெந்தெந் தெந்தனானு
செறிந்த டர்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலைக்
கொழுங்கொ டுந்திண் குன்றந் தங்குந் தம்பிரானே.

---

## கதிர்காமம் — 10

### 72. மருவுமடியார்கள் மனதில் விளையாடும் பெருமான்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதானு.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

### 73. கதிர்காம வெற்பிலுறைவோன்

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு முறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

## 74. கதிர்காமமுற்ருர்

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே உதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா எதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்ருன் இருகூருச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்ருய் வலக்கா ரமுற்ருய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோ லவிட்டார் கனுக்கா னமுத்தே
கதிர்க்காம முற்ருர் பெருமாளே.

## 75. சோதிஞானப் பெருமாளே

தானதன தானத் தனதான
தானதன தானத் தனதான.

மாதர்வச மாயுற் ருழல்வாரும்
மாதவமெ ணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே.

## 76. கதிரமலைப் பெருமான்

தனதனு தத்தனத் தனதனு தத்தனத்
தனதனு தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய

சமயபே தத்தினுக் கனுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான

துரியமே லற்புதப் பரமஞான னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு

துகளில்சா யுச்சியக்கதியையி றற்றசொற்
சுகசொரு பத்தைபுற் றடைவேனே

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்

புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்

கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமானே.

## 77. பச்சை மயில் வீரா

தனதனு தத்த தனதனு தத்த
தனதனு தத்த தனதான.

மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனுலும்

மதில்கள் தாவுற்ற கலைபடா வட்ட
மதி சுடா நிற்கு மதனுலும்

இருகனுல் முத்த முதிரயா மத்தி
னிரவினுல் நித்த மெலியாதே

இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்

கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
ககனமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

## 78. அமரர்லோகம் வாழ வைத்த பெருமான்

*தனன தான தான தத்த தனனதான தான தத்த*
*தனன தான தானதத்த தனதான.*

முதிரு மார வாரநட்பொ டிலகுமார வாரமெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியுமால மார்பிடத்து
முழுகி ஏறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடிசைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு னெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில் வீரா
கயலு லாம் விலோச னத்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவுவா னொருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி அசுர லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.

# திருகோணமலை — 11

## 79. நினைத்த காரியமநுகூலம் புரிவாய்

தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன
தனத்த தானன தனத்தான தானன தனதான.

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த ஆடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியெ மயலூறி

மிகுந்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ உழைத்தேவி டர்ப்படு கொடியேனைக்

கலக்க மாகவே மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியே தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொரி கடைத்தேற வேசெயும் ஒருவாழ்வே

கதிக்கு நாயக உனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை அருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவே சிறப்பான தாயருள் தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுநி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோ ணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாவெறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே.

# குன்றக்குடி — 12

## 80. இன்சொல் மொழிவான்

தனன தந்த தந்த தனன தந்த தந்த
தனன தந்த தந்த தனதான.

அழகெ றிந்த சந்த்ர முகவ டங்க லந்த
அமுத புஞ்ச இன்சொல் மொழியாலே
அடிது வண்ட தண்டை கலிலே னுஞ்சி லம்பொ
டணிச தங்கை கொஞ்சு நடையாலே
சுழியெ றிந்து நெஞ்சு சுழல நஞ்ச ணைந்து
தொடுமி ரண்டு கண்க ளதனாலே
துணைநெ ருங்கு கொங்கை மருவு கின்ற பெண்கள்
துயரை என்றொ ழிந்து விடுவேனோ
எழுது கும்ப கன்பி னிளைய தம்பி நம்பி
எதிர டைந்தி றைஞ்சல் புரிபோதே
இதம கிழ்ந்தி லங்கை அசுர ரந்த ரங்க
மொழிய என்ற கொண்டல் மருகோனே
மழுவு கந்த செங்கை அரனு கந்தி றைஞ்ச
மனுவி யம்பி நின்ற குருநாதா
வளமி குந்த குன்ற நகர்பு ரந்து துங்க
மலைவி ளங்க வந்த பெருமாளே.

## 81. மேலான பதம் மேவ அருள்தா

தானன தனதான தானன தனதான
தானன தனதான தனதான.

நாமேவு குயிலாலு மாமார னயிலாலு
நாடோறு மதிகாயும் வெயிலாலும்
நார்மாதர் வசையாலும் வேயூது மிசையாலும்
நாடாசை தருமோக வலையூடே

ஏமாறி முழுநாளு மாலாகி விருதாவி
லேவாடி விழிமாதர் துயருடே
ஏகாம லழியாத மேலான பதமீதி
லேகியு முடன் மேவ அருள்தாராய்
தாமோக முடனூறு பால்தேடி உரலூடு
தானேறி விளையாடும் ஒருபோதில்
தாயாக வருசோதை காணாது களவாடு
தாமோத ரமுராரி மருகோனே
மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
மாலாகி விளையாடு புயவீரா
வானூடு புகழ்நாடு தேனூறு புடைசூழ
மாயூர கிரிமேவு பெருமாளே.

## திருவருணை — 13

### 82. அருணைமால் வெற்பில் உறைவோன்

தானதன தானத்த தானதன தானத்த
தானதன தானத்த தனதான.

ஆலுமயில் போலுற்ற தோகையர்க ளேமெத்த
ஆரவட மேலிட்ட முலைமீதே
ஆனதுகி லேயிட்டு விதிதனி லேநிற்க
ஆமவரை யேசற்று முரையாதே
வேலுமழ கார்கொற்ற நீலமயில் மேலுற்ற
வீறுமுன தார்பத்ம முகமாறு
மேவியிரு பாகத்தும் வாழுமனை மார்தக்க
மேதகவு நானித்தம் உரையேனோ
நாலுமுக வேதற்கு மாலிலையில் மாலுக்கு
நாடவரி யார்பெற்ற ஒருபாலா
நாணமுடை யாள்வெற்றி வேடர்குல மீதொக்க
நாடுகுயில் பார்மிக்க எழில்மாது
வேலைவிழி வேடச்சி யோடமரர் மாதொக்க
வீறருணை மால்வெற்பில் உறைவோனே
வீரமுட னேயுற்ற சூரனணி மார்பத்து
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

## கழுகுமலை — 14

### 83. வள்ளி மணவாளா

தனன தனதன தனத்த தானன
தனன தனதன தனத்த தானன
தனன தனதன தனத்த தானன தனதான:

குதலை மொழியினர் நிதிக்கொள் வாரணி
முலையை விலைசெய்வார் தமக்கு மாமயல்
கொடிது கொடிததால் வருத்த மாயுறு துயராலே

குறுகி குறுகியே மிகுத்த வாவொடு
பெரிய பிரபுமா ரிடத்தி லேபதி
குலைய அடிமையா யிருத்த லாகிய ஒருபாவி

மதலை மறுகிவா லிபத்தி லேவெகு
பதகர் கொடியவா ளிடத்தி லேமிக
வறுமை புகல்வதே எனக்குமோவினி முடியாதே

மருவு புலவனர் கவிக்கு ளேசிறு
வழுவ தறைமகா சபைக்கு ளேகியெ
வகைய பெயரதா விலக்க ணவிதி மொழிவோனே

முதல வரிவிலோ டெதிர்த்த சூருடல்
மடிய அயிலையே விடுத்த வாகரு
முகிலை அணையதா நிறத்த மால்திரு மருகோனே

முளரி மலரனர் சிறைக்கு ளேபுக
நிறுவி பரமனர் செவிக்கு ளேமனு
முடிவ துணருமா றுரைத்த வாவளி மணவாளா

கதறும் அடியார் தமக்கெ ஞளுமெ
உதவ விரைவிலே செலுத்து மாபல
கனக மயுரவா கனத்து லாவிய புயவீரா

கதலி கமுகுசூழ் வயற்கு ளேயளி
இசையை முரலமா வறத்தில் மீறிய
கழுகு மலைமகா நகர்க்குள் மேவிய பெருமாளே.

## திருவொற்றியூர் — 15

### 84. ஞான அருள் தருவாய்

தனனதன தான தனனதன தான
தனனதன தான தனதான.

கரியமுகில் போலு மிருளளக பார
கயல் பொருத வேலின் விழிமாதர்
கலவிகளில் மூழ்கி ம்ருகமதப டீர
களபமுலை தோய அணையூடே
விரகமது வான மதனகலை யோது
வெறியனென நாளு மலைவோர்கள்
விதரணம தான வகைநகைகள் கூறி
விடுவதன்முன் ஞான அருள்தாராய்
அரிபிரமர் தேவர் முனிவர்சிவ யோகர்
அவர்கள்புக ழோத நிலமீதே
அதிகநட ராஜர் பரவுகுரு ராஜ
அமரர்குல நேச குமரேசா
சிரகரக பாலர் அரிவையொரு பாகர்
திகழ்கனக மேனி உடையாளர்
திருவளரு மாதி புரியதனில் மேவு
செயமுருக தேவர் பெருமாளே.

---

## காஞ்சிபுரம் — 16

### 85. குமரகோட்டத்துப் பெருமான்

தனதனத் தத்த தந்த தனதனத் தத்த தந்த
தனதனத் தத்த தந்த தனதான.

அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து
அவரைவாழ்த் தித்தி ரிந்து பொருள்தேடிச்
சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து
தெரிவைமார்க் குச்சொ ரிந்து அவமேயான்

திரியுமார்க் கத்து நிந்தை யதனைமாற் றிப்ப ரிந்து
தெளியமோ க்ஷத்தை யென்று அருள்வாயே
இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம்வேற் றுப்பி ரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொல் உடையோனே
குறவர்கூட் டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே.

## எட்டிக்குடி — 17

### 86. முத்தமிழ் பகர்வோன்

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனதான.

உரமுற் றிருசெப் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் திடமாயே
உடைசுற் றுமிடைச் சமையொக் கவடுத்
தமிதக் கெறுவத் துடன்வீறு
தரமொத் துபயக் களபத் தளமிக்
கவனத் தருணத் தனமீதே
சருவிச் சருவித் தழுவித் தழுவித்
தவமற் கவிடுத் துழல்வேனே
அரிபுத் திரசித் தசவக் கடவுட்
கருமைத் திருமைத் துனவேளே
அடல்குக் குடனற் கொடிகட் டியனர்த்
தசுரப் படையைப் பொருவோனே
ஜரிவிற் றவருக் கருள்வைத் தருள்வித்
தகமுத் தமிழைப் பகர்வோனே
பழனத் தொளிர்முத் தணியெட் டிகுடிப்
பதியிற் குமரப் பெருமாளே.

## வயலூர் — 18

### 87. எனதுளம் மகிழ்வுற அருள்வாய்

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

குருதி இருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமும் அலமலம் அழகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை மடையாயல்

குளிரி லறையக மிவைகளும் அலமலம்
மனைவி மகவனை அநுசர்கள் முன்றமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களும் அலமலம் ஒருநாலு

சுருதி வழிமொழி சிவகலை யலதினி
உலக கலைகளும் அலவலம் இலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி அயலார்பால்

சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவும் அலமலம் மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை எனதுள மகிழ்வுற அருள்வாயே

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற கசபதி முகிழ்நிகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட

விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
விளைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும் வடிவேலா

மருது நெறுநெறு நெறுவென முறிபட
உருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை யவிராலி

மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள் செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு பெருமாளே.

## மதுரை — 19

### 88. உம்பர் தொழும் தம்பிரான்

தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன
தனதன தனனத் தந்த தானன தனதான.

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதுளை உருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக
அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்ப லாயுரு கன்புறுதோ
கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவும்
கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு ருதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்
இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரானொரு கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை அன்றுசூழ
வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுணம் உண்டுலாவு
மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ரார்தொழு தம்பிரானே.

# பழமுதிர் சோலை (அழகர் கோயில்)

## ஆறுவது படை வீடு

முதிர்ந்த பழங்களை எந்நாளும் உடைமையாகக் கொண்டுள்ளது பழமுதிர்சோலை. பல அறிஞர்கள் திருமாலிருஞ்சோலை எனப்படும் அழகர்கோயில்தான் பழமுதிர்சோலை என்று கூறுகின்றனர். இங்குள்ள மலை அழகர்மலை. இம்மலையில் ஊற்றெடுத்து வருகின்ற ஆறு. சிலம்பாறு. இத்திருத்தலம் மதுரைக்கு வடக்கே பன்னிரண்டு மைல் தூரத்தில் இருக்கின்றது. ஆறுவது படை வீடாகிய பழமுதிர்சோலையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப்பெருமானை நக்கீரர் ''பழமுதிர்சோலை மலை கிழவோனே'' என வாழ்த்தி வளம் பெற்றார்.

ஔவையார் ஒருமுறை மதுரை செல்லும்போது பழமுதிர்சோலை வழியாகச் சென்றார் என்றும், தமிழ்க் கடவுளரான முருகப்பெருமான் தமிழ்த் தாயாரான ஔவைப் பிராட்டியார் மூலம் உலகு உய்ய உயர்வான நெறியைப் போதிக்க விரும்பி, மாட்டுக்காரச் சிறுவன் வேடந்தாங்கி ஔவையார் செல்லும் வழியிலுள்ள நாவல் மரத்திலிருந்து பழங்களை உதிர்த்தபோது, ஔவையார் பொறுக்கி எடுத்து மண் ஊதி உண்ண முயன்றார். அப்பொழுது சிறுவன் ஔவையாரைப் பார்த்து பாட்டி பழம் சுடும் நன்றாக ஊதி ஆறியபின் உண்ணுங்கள் என்றான். ஔவையார் சிறுவன் மதிநுட்பத்தை வியந்து, தனது அறிவுக் குறைவை எண்ணி வருந்தினார். வருந்திய ஔவையார் முன் சிறுவனான முருகக்கடவுள் காட்சி கொடுத்து, ஔவையாரிடம் இவ்வுலகத்தில் கொடியது எது? இனியது எது? பெரியது எது? என்னும் வினாக்களை வினவி, தம் அருள்வழி ஔவையார் விடை கூறவைத்தார் என்பது வரலாறு.

## இவ்வுலகில் கொடியது எது ?

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது! கொடிது! வறுமை கொடிது!
அதனினும் கொடிது! இளமையில் வறுமை!
அதனினும் கொடிது! ஆற்றெணுக் கொடுநோய்;
அதனிலும் கொடிது! அன்பில்லாப் பெண்டிர்;
அதனினும் கொடிது! இன்புற அவர் கையில் உண்பது
தானே!"

## இவ்வுலகில் இனியது எது ?

"இனியது கேட்கின் தனி நெடுவேலோய்!
இனிது! இனிது! ஏகாந்தம் இனிது;
அதனினும் இனிது! ஆதியைத் தொழுதல்;
அதனினும் இனிது! அறிவினர்ச் சேர்தல்;
அதனினும் இனிது! அறிவுள்ளாரைக் கனவிலும் நன
விலும் காண்பது தானே!"

## இவ்வுலகில் பெரியது எது ?

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது! பெரிது! புவனம் பெரிது!
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரியமாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சாற்றவும் பெரிதே!"

—ஔவையார்

மு. க.

# பழமுதிர் சோலை (அழகர் கோயில்)
## ஆறுவது படை வீடு

89. வாரம்வைத்தபாதம் இதோவென அருள்வாய்

*தான தத்த தான தனு தனுதன*
*தான தத்த தான தனு தனுதன*
*தான தத்த தான தனு தனுதன தனதான.*

சிர்சி றக்கு மேனி பசேல் பசேலென
நூபு ரத்தினைசை கலீர் கலீரென
சேர விட்ட தாள்கள் செவேல் செவேலென வருமானுர்
சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
நூறு லக்ஷ கோடி மயால் மயால்கொடு
தேடி ஒக்க வாடி ஐயோ ஐயோவென மடமாதர்
மார்ப டைத்த கோடு பளீர் பளீரென
ஏம லித்தெ ஞவி பகீர் பகீரென
மாம சக்கிலாசை உளோ முளோமென நினைவோடு
வாடை பற்று வேளை அடா அடாவென
நீம யக்க மேது சொலாய் சொலாயென
வாரம் வைத்த பாத மிதோ இதோவென அருள்வாயே
பாரதத்தை மேரு வெளீ வெளீதிகழ்
கோடொ டித்த நாளில் வரை வரைபவர்
பாணி றக்க ணேசர் குவா குவாகனர் இளையோனே
பாடன் முக்ய மாது தமீழ் தமீழிறை
மாமு நிக்கு காதி லுணர் உணர்விடு
பாச மற்ற வேத குரு குருபர குமரேசா
போர்மி குத்த சூரன் விடோம் விடோமென
நேரெ திர்க்க வேலை படீர் படீரென
போய றுத்த போது குபீர் குபீரென வெகுசோரி
பூமி உக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானை தொள்
பூணி இச்சை ஆறு புயா புயாறுள பெருமாளே.

## 90. ஆதிச் சோலை மலைப் பெருமானே

தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன
தானத் தானன தத்தன தத்தன தனதான.

பாசத் தால்வலை கட்டிய பொட்டிகள்
நேசித் தாரவர் சித்தம ருட்டிகள்
பாரப் பூதர மொத்தத னத்திகள் மிகவேதான்

பாவத் தால்மெயெ டுத்திடு பட்டிகள்
சீவிக் கோதிமு டித்தள கத்திகள்
பார்வைக் கேம யலைத்தரு துட்டிகள் ஒழியாத

மாசுற் றேறிய பித்தளை யிற்பணி
நீறிட் டேயொளி பற்றவி ளக்கிகள்
மார்பிற் காதினி விட்டபி லுக்கிகள் அதிமோக

வாய்வித் தாரமு ரைக்குமபத்திகள்
நேசித் தாரையு மெத்திய டிப்பவர்
மாயைக் கேமனம் வைத்தத னுட்டினம் அலைவேனோ

தேசிக் கானக முற்றதி னைப்புன
மேவிக் காவல்க வட்கல்சு ழற்றுவள்
சீதப் பாதகு றப்பெண்ம கிழ்ச்சிகொள் மணவாளா

தேடிப் பாடிய சொற்புல வர்க்கித
மாகத் தூதுசெ லத்தரில் கற்பக
தேவர்க் காதிதி ருப்புக லிப்பதி வருவோனே

ஆசித் தார்மன திற்புகு முத்தம
கூடற் கேவைகை யிற்கரை கட்டிட
ஆளொப் பாயுதிர் பிட்டமு துக்கடி படுவானே

டாரத் தோடகி லுற்றத ருக்குல
மேகத் தோடொரு மித்துநெ ருக்கிய
ஆதிச் சோலைம லைப்பதி யிற்றிகழ் பெருமாளே.

## 91. சிவமயத்தை அருள்

தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த
தனன தனதன தனத்தத் தாத்த தனதான.

அழகு தவழ் குழல் விரித்துக் காட்டி
விழிகள் கடையிணை புரட்டிக் காட்டி
அணிபொ னணிகுழை புரித்துக் காட்டி அநுராக

அவச இதமொழி படித்துக் காட்டி
அதர மளிதுவர் வெளுப்பைக் காட்டி
அமர்செய் நகநுதி அழுத்திக் காட்டி அணியாரம்

ஒழுகு மிருதன மசைத்துக் காட்டி
எழுத அரியிடை வளைத்துக் காட்டி
உலவு முடைதனை நெகிழ்த்துக் காட்டி உறவாடி

உருகு மவயவ மொழித்துக் காட்டி
உபய பரிபுர பதத்தைக் காட்டி
உயிரை விலைகொளு மவர்க்குத் தேட்டம் ஒழிவேனோ

முழுகு மருமறை முகத்துப் பாட்டி
கொழுநர் குடுமியை அறுத்துப் போட்ட
முதல்வ குகைபடு திருப்பொற் கோட்டு முனிநாடா

முடுகு முதலையை வரித்துக் கோட்டி
அடியர் தொழமக வழைத்துக் கூட்டி
முறைசெய் தமிழினை விரித்துக் கேட்ட முதுநீதர்

பழைய கடதட முகத்துக் கோட்டு
வழுவை உரியணி மறைச்சொற் கூட்டு
பரமர் பகிரதி சடைக்குட் சூட்டு பரமேசர்

பணிய அருள்சிவ மயத்தைக் காட்டு
குமர குலமலை உயர்த்திக் காட்டு
பரிவோ டணிமயில் நடத்திக் காட்டு பெருமாளே.

## 92. உமைபெற்ற புதல்வோனே

*தானதன தத்த தானதன தத்த*
*தானதன தத்த தனதான.*

வார்குழையை எட்டி வேலினைம ருட்டி
மாயநம னுக்கும் உறவாகி
மாதவம ழித்து லீலைகள் மிகுத்து
மாவடுவை ஒத்த விழிமாதர்
சிருடன ழைத்து வாய்கனிவு வைத்த
தேனிதழ ளித்து மநுபோக
சேர்வைதனை உற்று மோசம்விளை வித்து
சீர்மை கெட வைப்பர் உறவாமோ
வாரினை அறுத்து மேருவை மறித்து
மாகனக மொத்த குடமாகி
வாரவணி வைத்து மாலளித முற்று
மாலைகளு மொய்த்த தனமாது
தோரணி புயத்தி யோகினி சமர்த்தி
தோகையுமை பெற்ற புதல்வோனே
சூர்கிளை மடித்து வேல்கர மெடுத்து
சோலைமலை உற்ற பெருமாளே.

## 93. ஞானநடமே புரிந்து வருவாய்

*தானதன தான தந்த தனதான.*

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

## 94. சூரைவென்ற திறல்வீரா

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதான.

ஏலமுள தாயர் தந்தை மாதுமனை யான மைந்தர்
சேருபொரு ளாசை நெஞ்சு தடுமாறித்
தீமையுறு மாயை கொண்டு வாழ்வுசத மாமி தென்று
தேடினது போகவென்று தெருவூடே
வாலவய தான கொங்கை மேருநுத லானதிங்கள்
மாதர்மய லோடு சிந்தை மெலியாமல்
வாழுமயில் மீது வந்து தாளிணைகள் தாழு மென்றன்
மாயவினை தீர அன்பு புரிவாயே
சேலவள நாட னங்கள் ஆரவயல் சூழு மிஞ்சி
சேணிலவு தாவு செம்பொன் மணிமேடை
சேருமம ரேசர் தங்கள் ஊரிதென வாழ்வு கந்த
தீரமிகு சூரை வென்ற திறல்வீரா
ஆலவிட மேவு கண்டர் கோலமுட னீடு மன்று
ளாடல்புரி ஈசர் தந்தை களிகூர
ஆனமொழி யேப கர்ந்து சோலைமலை மேவு கந்த
ஆதிமுத லாக வந்த பெருமாளே.

## 95. சோலைமலை மேலமர்ந்த பெருமாள்

வீரமத னூல்வி ளம்பு போகமட மாதர் தங்கள்
வேல்விழியி னூல்ம யங்கி நிலமீதே
வீசுகையி னூலி தங்கள் பேசுமவர் வாயி தஞ்சொல்
வேலைசெய்து மால்மி குந்து விரகாகிப்
பாரவசமான வங்க ணீடுபொருள் போன பின்பு
பாதகனு மாகி நின்று பதையாமல்
பாகர்வர மேவ அன்பு நீபமலர் சூடு கின்ற
பாதமலர் நாடியென்று பணிவேனோ

பூரணம தான திங்கள் சூடுமர ஞரி டங்கொள்
    பூவையரு ளால்வ ளர்ந்த முருகோனே
பூவுலகெ லாம டங்க ஓரடியி ஞல ளந்த
    பூவைவடி வானு கந்த மருகோனே
சூரர்கிளை யேத டிந்து பாரமுடி யேய ரிந்து
    தூள்கள்பட நீறு கண்ட வடிவேலா
சோலைதனி லேப றந்து லாவுமயி லேறி வந்து
    சோலைமலை மேல மர்ந்த பெருமாளே.

## 96. ஞானகிரி மேவு பெருமாள்

*தனதன தனந்த தான தனதன தனந்த தான*
*தனதன தனந்த தான* ***தனதான.***

மலரணை ததும்ப மேக குழல்முடி சரிந்து வீழ
    மணபரி மளங்கள் வேர்வை அதனுடே
வழிபட இடங்க ளுட பிறைநுதல் புரண்டு மாழ்க
    வனகலை நெகிழ்ந்து போக இளநீரின்
முலையிணை ததும்ப நூலின் வகிரிடை சுழன்று வாட
    முகமுக மொடொன்று பாயல் அதனுடே
முதுமயல் கலந்து மூழ்கி மகிழ்கினும் அலங்க லாடு
    முடிவடி வொடங்கை வேலு மறவேனே
சிலைநுத லிளம்பெண் மோகி சடையள கியெந்தை பாதி
    திகழ்மர கதம்பொன் மேனி உமைபாலா
சிறுநகை புரிந்து சூரர் கிரிகட லெரிந்து போக
    திகிழயி லெறிந்த ஞான முருகோனே
கொலைமிகை பயின்ற வேடர் மகள்வளி மணந்த தோள
    குணவலர் கடம்ப மாலை அணிமார்பா
கொடிமின லடைந்த சோதி மழகதிர் தவழ்ந்த ஞான
    குலகிரி மகிழ்ந்து மேவு பெருமாளே

## ஆறு திருப்பதி

இது சுப்பிரமணியப் பெருமானின் ஆறுபடை வீடுகட்கும் பொருந்தும்.

### 97. சிவகுருபரனே !

*தனதன தனதானன தனதன தனதானன*
*தனதன தனதானன தனதான.*

அலைகடல் நிகராகிய விழிகொடு வலைவீசிகள்
அபகட மகபாவிகள் விரகாலே
அதிவித மதமா யத நிதமொழி பலகூறிகள்
அசடரொ டுறவாடிகள் அநியாயக்
கலைபகர் விலைமாதர்கள் இளைஞர்கள் குடிகேடிகள்
கருதிடு கொடியாருடன் இனிதாகக்
கனதன முலைமேல்விழு கபடனைநிருமூடனை
கழலிணை பெறவேயினி அருள்வாயே
அலைபுனல் தலைசூடிய பசுபதி மகனாகிய
அறுமுக வடிவேவருள் குருநாதா
அசுரர்கள் குடியேகெட அமரர்கள் பதியேபெற
அதிரிடும் வடிவேல் விடும் அதிசூரா
தலையய னறியாவொரு சிவகுரு பரனேயென
தரணியி லடியார்கண நினைவாகா
சகலமு முதலாகிய அறுபதி நிலைமேவிய
தடமயில் தனிலேறிய பெருமாளே.

### 98. ஆறுதிருப்பதியில் வளர் பெருமாள்

*தானதனத் தனதனன தனதான.*

ஈனமிகுத் துளபிறவி அணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞானவருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமருள் இளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே.

## திருமயிலை

### 99. அமரர் பதி வாழவைத்த பெருமாள்

*தனதனன தானதத்த தனதனன தானதத்த*
*தனதனன தானதத்த தனதான.*

களபமணி யாரமுற்ற வனசமுலை மீதுகொற்ற
கலகமத வேள்தொடுத்த கணையாலும்
கனிமொழிமி ஞர்கள்முற்றி மிசைவகைகள் பேசவுற்ற
கனலெனவு லாவுபட்ட மதியாலும்
வளமையணி நீடுபுட்ப சயனவணை மீதுருக்கு
வனிதைமயல் நாடிநித்தம் நலியாதே
வரியளியு லாவதுற்ற இருபுயம ளாவிவெற்றி
மலரணையில் நீயணைக்க வரவேணும்
துளபமணி மார்பசக்ர தரனரிமு ராரிசர்ப்ப
துயிலதர ளுதரித்த மருகோனே
சுருதிமறை வேள்விமிக்க மயிலைநகர் மேவுமுக்ர
துரகதக லாபபச்சை மயில்வீரா
அளகைவணி கோர்குலத்தில் வனிதையுயிர் மீளழைப்ப
அருள்பரவு பாடல்சொற்ற குமரேசா
அருவரையை நீறெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
அமரர்பதி வாழவைத்த பெருமாளே.

## காசி

### 100. காளகண்ட னுமா பதிதருபாலன்

*தானதந்த தனுதன தனதான.*

வேழமுண்ட விளாங்கனி அதுபோல
மேனிகொண்டு வியாபக மயலூறி
நாளுமிண்டர் கள்போல்மிக அயர்வாகி
நானுநைந்து விடாதருள் புரிவாயே
மாளவன்ற மணீசர்கள் கழுவேற
வாதில்வென்ற சிகாமணி மயில்வீரா
காளகண்ட னுமாபதி தருபாலா
காசிகங்கை யில்மேவிய பெருமாளே.

## திருநாவலூர்

### 101. தேவர் சிறைமீட்ட பெருமான்

தான தனதத்த தான தனதத்த
தான தனதத்த தனதான

கோலமறையொத்த மாலைதனிலுற்ற
கோரமதன்விட்ட கணையாலே
கோதிலதருக்கள் மேவுபொழிலுற்ற
கோகிலமிகுத்த குரலாலே
ஆலமெனவீட்டு வீசுகலைபற்றி
ஆரழலிறைக்கு நிலவாலே
ஆவிதளர்வுற்று வாடுமெனைநித்த
மாசைகொடணைக்க வரவேணும்
நாலுமறைகற்ற நான்முகனுதித்த
நாரணனுமெச்சு மருகோனே
நாவலர்மதிக்க வேல்தனையெடுத்து
நாகமயில்விட்ட மயில்வீரா
சேலெனும்விழிச்சி வேடுவர்சிறுக்கி
சீரணிதனத்தில் அணைவோனே
சிதவயல்சுற்று நாவல்தனிலுற்ற
தேவர்சிறைவிட்ட பெருமாளே.

## திருவாமூர்

### 102. அடியர் கருத்தின் பெருவாழ்வு

தான தனன தனத்தந் தனதான.

சீத மதிய தெறிக்குந் தழலாலே
சிறி மதனன் வளைக்குஞ் சிலையாலே
ஓத மருவி யலைக்குங் கடலாலே
ஊழி யிரவு தொலைக்கும் படியோதான்
மாது புகழை வளர்க்குந் திருவாமூர்
வாழ மயிலி லிருக்குங் குமரேசா
காதலடியர் கருத்தின் பெருவாழ்வே
காலன் முதுகை விரிக்கும் பெருமாளே.

## வயலூர்

### 103. பரிபூரணன்

தனதானன தனதானன தனதானன தனதானன
தனதானன தனதானன தனதான.

குயிலோமொழி அயிலோவிழி கொடியோவிடை பிடியோநடை
குறிபீர்தனி செறியீரினி என்றுபாடிக்
குனுகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலையாகுறி அலையாவிரு கொங்கைமிதிற்
பயிலாமன மகிழ்மோகித சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நினையாதுற நண்புகூரும்
பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணுகர
பதிநேருநி னருளால்மெயு ணர்ந்திடேனே
வெயில்விசிய கதிராயிர வருணோதய விருணசன
விசையேழ்பர ரவி சேயெனும் அங்கராசன்
விசிகாகவ மயில்பேடிகை படுபோதுசன் னிதியானவன்
விதிதேடிய திருவாளிய ரன்குமாரா
அயலூருறை மயிலாபல கலைமானுழை புலிதோலரி
அகிலாரம தெறிகாவிரி வண்டல்மேவு
அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசுர
அமராபதி அதில்வாழ்பவர் தம்பிரானே.

## வைத்திஸ்வரன் கோயில்

### 104. வாழ்வுற அருள்வாய்

தனத்தன தானத் தனதான.

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ
பரத்துறை சீலத் தவர்வாழ்வே
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே
வரத்துறை நீதர்க் கொருசேயே
வயித்திய நாதப் பெருமாளே;

123009

# சிதம்பரம்

## 105. குமாரப் பெருமான்

*தனனதன தான தனனதன தான*
*தனனதன தானத் தனதானு:*

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியூர் வாழ்பொற் பெருமாளே.

## 106. கந்தப் பெருமான்

*தனதனன தனன தந்தத் தனதானு.*

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே;

123009



## 107. ஞானந் தருவாய்

தானன தத்தந் தானன தத்தந்
தானன தத்தந் தனதான.

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவனொ டுக்கம் பூதவொடுக்கம்
தேறவு திக்கும் பரஞான
தீபவி ளக்கங் காணவெ னக்குன்
சீதள பத்மந் தருவாயே
பாவநி றத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவிரா
பாணிகள் கொட்டும் பேய்கள்பி தற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலிவ ளைக்குஞ்
சோலைசி றக்கும் புலியூரா
சூரர் மிகக் கொண் டாடந டிக்குந்
தோகைந டத்தும் பெருமாளே.

## 108. அருள் தருவாய்

தந்தனன தனதான தந்தனன தனதான

செங்கலச முலையார்பால் சிந்தைநிலை தடுமாறு
அங்கமிக மெலியாதே அன்புருக அருள்வாயே
செங்கைபிடி கொடியோனே செஞ்சொல்தெரி புலவோனே
மங்கையுமை தருசேயே மன்றுள்வளர் பெருமாளே.

வேலும் மயிலும் துணை.

## சைவசமய நூல்கள்

* விலைகள் காலத்திற்கு ஏற்ப மாற்றத்திற்குரியன *

| | | |
|---|---|---|
| 1. | அபிராமியந்தாதி | —85 |
| 2. | எட்டிக்குடியேசல் | —25 |
| 3. | கதிர்காமத் திருமுருகன் கீர்த்தனங்கள் | —40 |
| 4. | கந்தர்சஷ்டிகவசம் | —75 |
| 5. | கந்தரநுபூதி | —50 |
| 6. | கந்தரலங்காரம் | —50 |
| 7. | கவசநூற்கோவை | 1—25 |
| 8. | கோளறு திருப்பதிகம் | —30 |
| 9. | சகலகலாவல்லி மாலை | —30 |
| 10. | சண்முக கவசம் | —30 |
| 11. | சந்தியாவந்தன ரகசியம் | —25 |
| 12. | சிவஞானபோதம் | 1—25 |
| 13. | சிவநெறித்தோத்திரத் திரட்டு | 1—25 |
| 14. | சிவபுராணம் | —30 |
| 15. | சிவராத்திரி புராணம் (உரையுடன்) | 15—00 |
| 16. | சிவராத்திரி மகிமை | 2—00 |
| 17. | சேக்கிழார் சுவாமிகள் வரலாறு | —75 |
| 18. | சைவவினுவிடை. (முதற் புத்தகம்) | 1—00 |
| 19. | தமிழருச்சனை மலர் | —50 |
| 20. | திருக்கேதீச்சர மணவாளர் மாலை | —40 |
| 21. | திருச்செந்தூரகவல் | —75 |
| 22. | திருமுருகாற்றுப்படை | —40 |
| 23. | திருமுறைகளும் தோத்திரப்பாடல்களும் | 1-25 |
| 24. | திருவஞ்செழுத்து | 1—00 |
| 25. | திருவருட்பயன் (உரையுடன்) | —50 |
| 26. | தேவி தோத்திரத்திரட்டு | —50 |
| 27. | தோத்திர மாலை | —75 |
| 28. | நடராஜப் பத்து (சிவநாமாவழியுடன்) | —40 |
| 29. | நவக்கிரக தோத்திரம் | —30 |
| 30. | நவராத்திரிப் பாமாலை | 1—00 |
| 31. | நித்தியகருமவிதி | —75 |
| 32 | நூற்றெட்டுத் திருப்பெயர் வழிபாடு | —75 |
| 33. | பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு | 1—25 |
| 34. | பன்னிருதிருமுறைத்தோத்திரத்திரட்டு | 2-50 |
| 35. | பிள்ளையார் கதை | 1—25 |
| 36. | பிள்ளையார் புராணம்(உரையுடன்) | 2—50 |
| 37. | மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் | 1—25 |
| 38. | மார்கழிப் பாராயணம் | 1—50 |
| 39. | மாரியம்மன் தாலாட்டு | 1—00 |
| 40. | விநாயகர் தோத்திரமாலை | 2—50 |

காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பெண்கள் ௧

1 - உமை — [illegible]

2 - ஔவை — [illegible]

3 - சீதை — [illegible]

4 - வள்ளி — [illegible]

ஆண்கள்

1 தமிழ் — [illegible]

2 அதிகமான் — [illegible]

3 வள்ளுவர் — [illegible]

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

சுபம்

தொப்ப முதல் விநாயகனும்
சேர்ந்தவர் [illegible]

ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible]

[illegible]

[illegible]

[illegible] மலைமேல்

ஸ்ரீ [illegible] ஸ்ரீ [illegible]

ஸ்ரீ காந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256